# வள்ளலார் காட்டிய வழி

ஆர். சண்முகம்

தமிழ்ப் பண்ணை
சென்னை-17.

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1966.
பதிப்புரிமை பெற்றது.

விலை ரூபாய் இரண்டு

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

# எனது பிரார்த்தனை!

அண்மை நாளில் நான் பெற்ற ஒரு மனப்புரட்சி யின் விளைவு தான் இந்தச் சிறிய நூல்!

பேரறிஞர் ம. பொ. சிவஞானம் அவர்கள் அருட் பிரகாச வள்ளலார் அவர்களைக்குறித்து ஆற்றிய சொற்பொழிவுகளை பலவற்றைத் தொடர்ந்து கேட்டதன் காரணமாகவும், ம. பொ. சி அவர்கள் இயற்றிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற சீர்மிகு நூலினை ஆழ்ந்து அகன்று கற்றதன் விளைவா கவும் என் மனத்திலே இது நாள் வரை கண்டறியாத புதிய உணர்வும் விழிப்பும் மலர்வுற்றது.

வள்ளலார், பண்டைய ஞானிகளான பட்டினத் தார், தாயுமானுர் போன்ற 'ஆன்மீக மகான்' என்று மட்டுமே கருதி வந்த தமிழுலகிற்கு பேரறிஞர் ம. பொ. சி. ஒரு புதுப்பார்வையைத் தந்து பிரமிக்க வைத்திருக்கிருர்.

"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற தம் முடைய நூலின் இறுதியிலே;

> "தமிழகமே! பாரதமே! உலகப் பெரு நிலமே! ஆன்மநேய ஒருமைப்பாடு காணத் திரண்டெழுக! மனிதகுலமே! உன்னை வாழ் விக்க வந்த வள்ளற் பெருமானை வாழ்த்து! வாழ்த்து!! வாழ்த்து!!! நீ வாழ அதுவே வழி!"

என்று ம. பொ. சி. யவர்கள் முழங்கியிருப்பது எனது செவிகளிலே மட்டுமல்ல உள் மனத்திலும் ரீங்கார மிட்டது. வள்ளல் பெருமானை வாழ்த்தி என்னுடைய சிறு கடமை யொன்றினையும் நிறை வேற்ற ஆசை கொண்டேன். இச்சிறு நூலின் நோக்கம் இது தான்.

ம. பொ. சி அவர்களின் கருத்துகளை ஆழ்ந்து கற்கும் போது என்னுள் எழுந்த உணர்ச்சிகளை எனக் காகக் குறித்து வைத்திருந்தேன். இந்தச் சிறு நூலில் நான் பெற்ற இன்பத்தை தமிழ் மக்களுக்கும் பகிர்ந் தளிக்க முன்வருகிறேன். என்னுடைய பணி இவ்வளவுதான்!

வள்ளல் பெருமானின் வழிகளைத் தெளிவுறப் புரிந்து கொள்ள—அவர் உள்ளத்தை சரிவர அறிந்து கொள்ள நான் மேற் கொள்ளும் சிறு முயற்சியாக அன்பர்கள் மத்தியில் இச்சிறு நூலை வைக்கிறேன். இத்துறையில் நான் மேலும் முன்னேற உங்கள் ஆசியும், ஊக்கமூட்டுதலும் எனக்குக் கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

அன்பன்

"ரசம்"

(ஆர். சண்முகம்)

# வள்ளலார் காட்டிய வழி!

## காரிருளில் கதிரவன்!

**பா**ரதம்—குறிப்பாகத் தமிழகம் இறையருள் பெற்ற ஞானிகள் பலரின் பிறப்பிடமாகும். இந்த வகையில் நமது நாடு உலகத்திற்கே தலைமை தாங்கு கிறது என்று கூறினும் பொருந்தும்.

மனிதனும், மனிதன் வாழும் உலகமும் கடவுளின் அருட்பிச்சையாகும். இறைவனை மனிதன் மறந்து விட்டால் அவனும் இல்லை, அவன் வாழும் உலகமும் இல்லை.

மனிதனை சிருஷ்டித்த கடவுள் மனிதன் இன்ப வாழ்வு வாழ்வதற்கென்றே இவ்வுலகத்தையும், உலகத்தின் மற்ற சூழல்களையும் சமைத்துத் தந்தார்.

இறைவனுடைய கருணை உள்ளத்தை புரிந்து கொள்ளமாட்டாத காரணத்தால் தான் மனிதன் அல்லலுற்று அவதியடைந்து துன்பத்தைத் தானே தருவித்துக் கொண்டு திண்டாடுகின்றான்.

"எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா, இறைவா!" என இறைவனின் அறக் கருணைத் தோற்றத்தை உணர்ந்த காரணத்தால் மெய்மறந்து பாடினார் பாரதியார். இறைவனின் கருணையுள்ளத்தையும், அவரளித்திருக்கும் அறப் பிச்சையினையும் உணராத காரணத்தால் தான் நாம் 'துன்பம், துன்பம்' என ஓலமிட்டழுது, துயரடைந்து வாடுகிறோம்.

இறைவனது கருணையுள்ளத்தை சாமானிய மக்களுக்கு உணர்த்தவும், மக்கள் இறைவனின் திருவடி நிழலையடைவதற்கான வழிமுறைகளைச் சுட்டிக் காட்டவுமே நமது நாட்டில் ஞானிகளும் மகான்களும், முனிவர்களும், தோன்றி இறைவனடி யார்களாகச் செயற்பட்டனர்.

இறைவனின் கருணையுள்ளத்தை உணர்ந்து கடைத்தேற தன்னைச் சூழ்ந்து நிற்கும் பிற ஜீவராசி களிடம் நாமும் கருணையோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதே நம்முடைய பண்டைய ஞானிகள்—மகான்களின் உபதேசமாக அமைந்திருந் தது; தன்னலம் மறந்து பிறர் நலம் பேணுவதே இறைவனை வழிபடுவோரின் தலையாய கடமை என பிறர்க்குபதேசம் செய்வதோடு, அவ்வழி ஒழுகியும் வழிகாட்டினர் மகான்கள்.

"அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்து எய்தும் பரா பரமே!" என்று பிறர் நலம் பேணுவதே இன்பம் எனக் குரல் கொடுத்தனர் முன்னோர்.

அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே

இது திருமூலர் வாக்கு. சிவன் என்றாலும் அன்பு என்றாலும் இரண்டும் ஒன்றுதான் என இப்பாடலின் மூலம் அழகாக எடுத்தியம்புகிறார். வெறும் சிவபஜனை செய்பவன் அன்பினை வழிபடுவதை விடுத்தான் என்றால், பிற உயிர்களிடம் அன்பு செலுத்தத் தவறுவான் எனின் அவன் இறைவனை இகழுபவனே தவிர, இறையடியானாக மாட்டான் என வரிந்தும் கூறுகிறார். அன்பின் வழியே இறைவன் நிற்கிறான் என்ற இந்த தத்துவத்தின் அடிப்படை இன்று உலக மெங்கும் தோன்றியுள்ள பல்வேறு அரசியல் இலக்கங்களின் அடிப்படையாகத் திகழுவதை உணரும் போது நமக்கு வியப்பு தோன்றுகிறதல்லவா!

சித்தர் பாடல் ஒன்றினை நோக்குவோம்:

தாவாரம் இல்லை தமக்கு ஓர் வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி

என்ற குதம்பைச் சித்தர் பாடல் மக்கள் மத்தியிலே பிரசித்தி பெற்றதாகும். ஆனால் இப்பாடலின் உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் வெகு சிலரே!

இப்பாடலுக்கு அறிஞர்கள் கீழ்க்கண்டவாறு பொருள் கூறியிருக்கின்றனர்.

தாவாரம்—பிற உயர்களின் மீது கருணை
இல்லை தமக்கு—இல்லாதவர்களுக்கு.
ஓர் வீட்டில்லை—'வீடு' எனக் குறிப்பிடப்

பெறும் சுவர்க்க வாழ்வு இல்லை. இத்தகை யோருக்கு....

தேவாரம் ஏதுக்கடி தெய்வத்தைத் துதி பாடும் பாசுரங்கள் எதற்காக? அவற்றைப் பாடித்திரிவது வெறும்போலித்தன மன்றோ!

பிற உயிர்களிடம் கருணை காட்டி அவற்றிற்கு உதவ முன் வராத நிலையில் இறைவன் புகழைப் பாடுவதால் பயனென்ன? என அதட்டிக் கேட்கும் பாடலின் உட்பொருளை உணரும்போது, இன்றைய மார்க்ஸீய—சோஷலிச சித்தாந்த இலட்சியங்க ளெல்லாம் மிகச் சாமான்யமானவையாக நமக்குப் படுகின்றன அல்லவா!

முற்காலத்தில் இறைவன் நம்பிக்கையும் மதங் களின் இலட்சியமும் மேற்கண்டவாறு மிக நோக்கங் களைக் கொண்டதாக அமைந்திருந்தது. பிற்காலத் தில் இந்த உயர்நிலை மெல்ல மெல்லத் தேய்ந்து அழிவு நிலைக்கு வந்து சேர்ந்தது.

மதங்களின் அடிப்படை நோக்கம் உயர்வா யிருக்க பின்னர் தோன்றிய சுயநல நோக்கமுள்ள மதத் தலைவர்களின் சொல்லாலும், செயலாலும் மதங்களின் உயர்தத்துவங்களின் மீது மாசுபடியத் தொடங்கியது.

பொருளற்ற மூடநம்பிக்கைகள் மக்கள் மீது திணிக்கப்பட்டன. இறைவனின் அருட் கருணை யுள்ளத்தை விளக்கும் நுண்ணிய தத்துவ் புராணக் கதை அவ்விதமே நிகழ்ந்த உண்மைக் கதைகள் என்ற குருட்டுத்தனமான நம்பிக்கை மக்களிடம் வலிந்து ஊட்டப்பட்டன. தன்னைப் போலொத்த பிறமக்களிடமும், மற்ற ஜீவ்ராசிகளிடத்தும் கருணை

யுடன் ஒழுகுவதே இறைவனையடையும் எளிய—சுருக்கமான வழி என்ற உண்மை நிலை மறைக்கப் பட்டு, இறைவனுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலமும் ஆரவாரமாக பிரார்த்தனை செய்வதன் மூல மும் இறைவன் அருளைப் பெறலாம் என்ற தவறான போக்கில் மக்கள் அழைத்துச் செல்லப் பட்டனர்.

காலத்துக்கு ஏற்ப, மக்களின் மன வளர்ச்சிக்கு ஏற்ப, சூழ்நிலைக்கேற்ப இறைவனின் திருவுள் ளத்தை மக்களுக்கு உணர்த்த மதவாதிகளும், இறை பணியில் ஈடுபட்டிருந்த பிறரும் தவறிவிட்டனர். பழைய புராண—இதிகாசக் கதைகளை அப்படியே நிகழ்ந்த உண்மைக் கதைகள் என நம்பி வந்த சாமா னிய மக்கள், அக்கதைகள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தாமல் நிற்பதைக் கண்டு குழப்பமடைந் தனர். அன்று நடந்ததாகக் கருதப்பட்ட அற்பு தங்கள் இந்த நாளில் நிகழாதது கண்டு குழப்ப மடைந்தனர்.

இந்த நிலையில் நாத்தழும்பேற நாத்திகம் பேசும் கும்பல் பெருத்தது. தெய்வ நம்பிக்கையை சிதைக்கும் நோக்கமுடைய அவர்களின் முரட்டு வாதங்கள் எங்கும் ஒலித்தன. ‘இறைவன்’ என்ற ஒரு சக்தியே இல்லை என்ற நாத்திகர்களின் குருட்டு கூச்சலைக் கேட்டு சாமானிய மக்கள் மதி மயங்கினர். ‘இறைவன் இல்லை’ என்ற நாத்திக வாதமும் உண்மையோ எனத் தயங்கித் திகைத்தனர்.

சாமானிய மக்களிடம் இறைவனைப் பற்றிய நம்பிக்கை ஆட்டங் காணத் தொடங்கியது. இறைவனை ஒரேயடியாக மறுத்துப் பேசும் அளவுக்கு

மக்களுக்குத் துணிச்சல் தோன்றுவிட்டாலும், தெய்வத்தை மறந்து தம் மனம் போன போக்கில் நடக்கும் நிலை எங்கும் படரலாயிற்று.

இதன் காரணமாக மக்கள் மனத்தின் தூய்மை கெடத் துவங்கியது. அங்கே வெறும் சுயநலமும் கூசாது பிறருக்குத் தீமை செய்யும் இயல்பும் வளர லாயிற்று. நேர்மை, நாணயம், நம்பிக்கை போன்ற ஒழுக்கக் கோட்பாடுகள் சிதைந்தன. மக்களிடையே ஒருவரையொருவர் நம்பாத சூழ்நிலை பெருகியது. இதன் காரணமாக மனித குலம் தனக்குத் தானே, விரோதியாக நின்று மெல்ல மெல்ல அழிந்துவரும் விபரீத நிலை உருவெடுத்தது.

இத்தகையதோர் நெருக்கடியான—குழப்பம் நிறைந்த—நேரத்தில்தான் காரிருளைக் கிழித்து வந்த கதிரவன் போல ஆன்மீக உலகிலே வள்ளல் இராமலிங்கனார் அவதரித்து நாட்டிலே புரட்சி யையும், புத்துணர்ச்சியினையும் மக்கள் மத்தியிலே உண்டாக்கினர்.

## கருணை வடிவாகி வந்த ஞானி!

பழம்பெரும் மகான்களின் வழித் தோன்றலே நம்முடைய வள்ளல் இராமலிங்கனார் என்று முன்னர் குறிப்பிட்டோம். யோசித்துப் பார்த்தால் சில—பல வகையில் இராமலிங்கனார் பண்டைய மகான் களையும் ஞானிகளையும்விட மேம்பட்டுக் காட்சி யளித்தார் என்ற உண்மை புலப்படுகிறது.

பண்டை நாளில் வாழ்ந்த மகான்களும் ஞானி களும் மக்கள் இறைவனின் திருவடிகளை மறவாமல்,

உலக வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற இலட்சியத்தையே மக்களுக்கு உபதேசித்தனர். என்ருலும், பிற்காலத்தில் அவர்களுடைய நல்லுபதேசங்கள் பின் வந்த மதத் தலைவர்கள் சிலரது சுயநலங் காரணமாகவும் அறியாமை காரணமாகவும் தவருக திருத்தி மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

மனிதன் தன்னை மறந்து, தன்னைச் சூழ்ந்து நிற்கும் பிற ஜீவராசிகளை மறந்து—பொதுவாக வாழும் உலகத்தையே மறந்து இறைவனை நோக்கித் துதி செய்து தன்னையும் தன் வாழ்வையும் அழித்துக் கொள்வதுதான் உயர்ந்த ஒரு நிலை என்ற கோட்பாடு வளரத் துவங்கியது.

அந்த பொருளற்ற—போலித்தனமான மூட நம்பிக்கையின் பாற்பட்ட கோட்பாடுகளை உடைத்துப் புரட்சி வழிகாட்டி இறைவனின் உண்மை உருவத்தையும், உள்ளத்தையும் தாமும் உணர்ந்து மக்களுக்கும் உணர்த்திஞர்.

தமது உடலே இறைவன் உறையும் திருக் கோயில் என்றும் நம் உடலைப் பேணுவதே இறைவனைப் பேணும் பணி என்றும் வலியுறுத்திஞர். உடம்பெடுத்த உயிர்கள் எதுவாஞலும் அதன்பால் கருணை காட்டி ஒழுகுவது இறைவனை மகிழ்விக்கும் உயர் பணி என்றும், கலையுரைத்த கற்பனையெல்லாம் நிலையென எண்ணும் கண் மூடிப் பழக்கம் மண் மூடிப் போக, இறைவனின் கருணைப் பேருள்ளத்தை உள்ளது உள்ளபடியே உணர்வதே உண்மை வழி யென்றும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

வள்ளல் இராமலிங்கனாரைக் கருணையின் திரு உருவம் என்றுதான் கூற வேண்டும். அவர்

மிளகை நேர் ஒரு சிறிய வண்டு வந்து, விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி இளகு நெஞ்சம் பெற்ற கருணையாளர்.

நடமாடும் ஜீவராசிகளின் துயரங் கண்டு மட்டு மின்றி, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்கூட வாடி, வாடிக் கண்ணீர் வடித்த வள்ளல் பெருந் தகை.

'பகைவனுக்கருள்வாய்' என்ற கவி முழக்கத்தை ஒரு லட்சியமாக மேற்கொண்டு தம்மை, தமது அறக் கருணைப் பெரும் பணியை குறை கூறி அழிக்க முயன்ற வைதீகக் கூட்டத்தை ம் மன்னித்து அவர் கள்பாலும் நெஞ்சம் திறந்த அன்பு காட்டிய செம்மல்!

வள்ளல் இராமலிங்கனர் ஆறுயிரத்துக்கு மேற் பட்ட அருட்பாக்களை இயற்றியுள்ளார். அத்தனை யும் உயிர்க்குலம் அனைத்தும் உய்ய மனம் உருகி உருகி ஆண்டவனிடம் கருணை பிச்சை கேட்ட பிரார்த்தனைக் கீதங்கள்தாம்!

மனிதன் மரணமில்லாப் பெரு வாழ்வு வாழ முடியும் என்று இராமலிங்க வள்ளலார் நம்பினர்! அது வெறும் மூட நம்பிக்கையல்ல என்பதை தாமே சாதித்துக் காட்டி நிரூபிக்கவும் செய்தார் என்ற உண்மையினை அவருடைய சரித்திரம் நமக்குச் செப்பு கின்றது.

தம்முடைய வாழ்நாளில் நுணுகி ஆய்ந்து உணர்ந்து இராமலிங்கனர் உலகத்திற்கு உபதேசித்த மாபெரும் கோட்பாடு 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்ற உயர் தனி இலட்சியமாம்.

இன்று பேசப்படும் வெறும் உலக 'ஒருமைப் பாடு' என்ற வரட்டு தத்துவமல்ல. மேலோட்ட மான சாதி, மத, குல, மத, மொழி வழிப்பட்ட ஒற்றுமையை வள்ளலார் பெரிதென ஏற்கவில்லை. உயிர்கள் எதுவாயினும், அவற்றின் ஆன்ம வழிப் பட்ட ஒருமைப்பாடு வேண்டும் என்று கனவு கண் டார். அந்த வழியில் சென்று கருணையை அடிப் படையாகக் கொண்ட ஒரு புரட்சி மதத்தையே நிறுவி புத்துலகம் ஒன்றைச் சமைக்க வேண்டும் என்று முயற்சியெடுத்தார்.

பசிப்பிணிதான் உயிர் வாழ்வின் பெரும் பிணி என்று கண்டவர் இராமலிங்க அடிகளார். உயிர்களை சன்மார்க்க நெறியினின்று புரட்டித் துன்மார்க்க நெறியில் கொண்டு செலுத்துவது பசிப்பிணிதான் என்று உணர்ந்தார். பசித்த உயிர்க்கு உணவளிப் பதைவிட உயர்ந்த இறைபணி இல்லவே இல்லை என்று உறுதியாக நம்பினார்.

பட்டினி ஒழிப்புப் போர் அடிகளாரின் தலையாய இலட்சியமாகத் திகழ்ந்தது என்று கூறலாம். பட்டினி ஒழிப்புப் போரை 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என வர்ணித்த அடிகளார், இவ்வொழுக்கத்தைக் கடைப் பிடியாதார் மனிதரே அல்ல என திட்டமாக அறி வித்தார்.

பசிப் பிணி நீக்குவது உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்த பிறப் பினால் அடையத்தக்க 'ஆன்ம லாபம்' என்று உணர்த் தினார்.

மேற்கூறியவற்றால் நமது வள்ளலார் பண்டைய ஞானியர்களைவிட உயர்ந்த ஒரு புரட்சியாளர் என்ற உண்மை உறுதிப்படுகின்றது.

ஞானியர்க்கு ஞானியராய் உடலாரோக்கியம் காப்பாற்ற வழிகாட்டும் மருத்துவர்க்கு மருத்துவ ராய், செம்மையான வாழ்வை அமைத்துக்கொண்டு அற வழி நடக்க வழிகாட்டிய அரும்பெரும் தலைவ ராய், உலக ஒருமைப்பாட்டுக்கு புது வழி சமைத்துக் காட்டிய மகாத்மாவாய் திகழ்ந்தார் கருணை வடி வாகிவந்த அருட்பிரகாச வள்ளலார்.

## நல்லதோர் வழிகாட்டி!

'அருட்பிரகாச வள்ளல் இராமலிங்க அடிகளார் வெறும் இறைபணியாளராக—இறைவனின் திரு வுள்ளமுணர்ந்து, அதனை மக்களுக்கு உபதேசித்த ஞானியராக மட்டும் விளங்கவில்லை. ஒப்புயர்வற்ற சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். உண் மையில் பிறப்பு வழியும், சாதி வழியும் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு மனித சமூக வளர்ச்சிக்கே தடையாக நின்ற நூல் வருண பேதத்துக்கு எதிராக முதற் குரல் கொடுத்த சீர்திருத்தவாதி நமது அடி களார்தான்.

அருட்பிரகாச வள்ளல் இராமலிங்க அடிகளா ரின் பெருஞ்சிறப்புக்கு அடித்தளம் அமைத்து நிற்கும் விஷயங்கள் பலப்பல.

வள்ளலார் ஒப்புயர்வற்ற ஒரு சமூக சீர்திருத்த வாதியாகத் திகழ்ந்தார் என்பது அவருக்குள்ள பெருஞ் சிறப்புகளில் ஒன்று: தமிழகத்தைப் பொருத்தமட்டில் வள்ளலார்தான் உண்மையான— முழுமையான முதற் சமூக சீர்திருத்தவாதி என்று குறிப்பிட வேண்டும்.

இன்று சமூக சீர்திருத்தம் பேசிவிடுவது மிக எளிது. விஞ்ஞான வசதிகள் பெருகி, மக்கள் தனித்து வாழ முடியாத ஒரு சூழ்நிலை நிலவும் இந்தக் காலத்தில் சாதி உயர்வு தாழ்வு கூடாது, தீண்டாமை இல்லை, ஆண்டான் அடிமை என்ற பேதம் பார்க்கக்கூடாது என்றெல்லாம் எளிதாக குரல் கொடுத்து விடலாம். மேடை அதிர முழக்க மிடலாம். இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர், வள்ளலார் வாழ்ந்த அந்த நாளில் சாதிப் பிரிவுகளும் அதன் வழியாக நிலவும் உயர்வு தாழ்வு நிலையும் கடவுளே செய்த ஏற்பாடுகள் என்று மக்கள் நம்பி வந்த நாளில் மனித குல மேம்பாட்டிற்கு—வளர்ச்சிக்குத் தடையாக சாதி, குல வருண பேதங்கள் நிலவுகின்றன என்று கூறி, அவற்றை எதிர்த்த மாவீரராக வள்ளலார் திகழ்ந்தார் என்றால், அவருடைய நெஞ்சுரிமைத் திறத்தினை எங்ஙனம் வர்ணிப்பது?

புராணக் கட்டுக்கதைகளை 'கலை யுரைத்த கற்பனை' என அடித்துக் கூறி மக்களின் மூட நம்பிக்கைக்கு எதிராக அன்றே குரல் கொடுத்தார் வள்ளலார். போலி மதவெறியினைக் கண்டித்து உண்மையான மதநெறிகளை மக்களுக்குக் காண்பித்தார்.

பிற மதங்களை சகட்டு மேனிக்குத் தாக்கி, தூஷித்து வந்த அக்கால போக்கினைக் கண்டித்து, பிற மதங்கள் கூறும் உண்மையினை யெல்லாம் ஏற்று, 'எம் மதமும் சம்மதமே' என்று அரவணைத்துக் கொண்ட அண்ணல் அடிகளாராவர்.

ஒருவன் உல்லாசமாக உப்பரிகையிலே வாழ மற்றொருவன் . ஒட்டாண்டியாக நடுத்தெருவிலே

அலேய அமைந்துள்ள வாழ்வு முறை அவ்னவன் செய்த அறத்தின் பயன் என்ற பத்தாம் பசலித் தத்துவத்தின் போலித்தனத்தை உறித்தெடுத்து, மதப்புரட்டர்களின் வாயை அடக்கிவிட்டு பொருளா தார சமத்துவம் பேசிய மேதை வள்ளல் இராமலிங்க அடிகளார்!

பெண்குலத்தின் பெருமையை உரிமையை உரிய தொரு உயர்நிலேக்கு உயர்த்திப் பேசிய பேரறிவாளர் வள்ளலாராவர்!

இறைவனின் பெயரால் அந்நாளில் நடை பெற்ற உயிர்ப்பலிக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்!

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு சரியானதொரு எல்லேக்கல்லாகத் திகழ்ந்தவர் கருணே வள்ளல் அவர்கள். அவருடைய கருத்தமைந்த மிடுக்கான, இனிமை தவழும் உரைநடை தமிழ் வளர்ச்சி வர லாற்றின் பெருமைமிகு ஏடுகளாகும். அது மட்டு மன்று அவர் பாடிய ஆருயிரத்து மேற்பட்ட பாடல் கள் தமிழ் இலக்கிய உலகின் தூங்கா விளக்குகளாகத் துலங்குகின்றன. அவை வெறும் பிரார்த்தனேக் கீதங்கள் மட்டுமல்ல. பக்தி, முக்தி ஆகிய உணர்ச்சி களுக்கு வழி கோலியதோடு, அரசியல், பொருளா தாரம், சமூகம், மொழி, சமயம், தேசியம் சர்வதேசி யம் ஆகிய கோட்பாடுகளே முரசறையும் புரட்சிக் கீத மாகவும் அவை திகழ்ந்தன.

இங்ஙனம்-அருட்பிரகாச வள்ளலார் பல துறை யிலும் மக்களுக்கு நல்வழி காட்டிய நல்லதொரு புரட்சி வீரராகத் திகழ்ந்தார்.

# வள்ளலாரின் வாழ்க்கை !

தில்லையம்பதிக்கு அருகாமையில் மருதூர் என்ற சிற்றூர் ஒன்றிருந்தது. அந்த திருப்பதிதான் வள்ளல் இராமலிங்கனார் அவதரித்த புனிதஸ்தல மாகும்.

இராமலிங்கனார் திரு அவதாரம் செய்த புனித நாள் 1823ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐந்தாம் தேதி, ஞாயிற்றுக் கிழமையாகும். கருவிலேயே திரு வுற்ற அடிகளாரைத் தாங்கிய மணி வயிறு பெற்ற அன்னையார் பெயர் சின்னம்மாள். அருமைத் தந்தை யார் பெயர் இராமையாபிள்ளை என்பதாகும்.

இராமையா பிள்ளை, சின்னம்மாள் தம்பதிகட்கு இராமலிங்கனார் ஐந்தாவது மகனாக அவதரித்தார். அவருக்கு முன்னவர்கள் பெயர் சபாபதி, பரசு ராமன், சுந்தரம்மாள், உண்ணுமலை என்பனவாகும்.

இராமலிங்கனார் பிறந்த நேரத்தை யொட்டி, வழக்கம் போல சாதகம் கணிக்க ஏற்பாடு செய்தனர் பெற்றோர். இராமலிங்கனாருக்கு சாஸ்த்திரி யொருவர் கணித்த சாதகம் வருமாறு:

"....இந்த சாதக முடையோன் சிரஞ்சீவி; இவன் உயிர் போவதில்லை. உலகனைத்தும் வள்ளலாய் வாழ் வான்; தைரியவான்; கனதனம் கருதான்; சுழுத்தி நாட்ட முடையான்; உலகுயிர் பால் பேரிரக்கம் கொண்டவன்; பத்தாவது ஆண்டில் ஒன்றில் காகலனுவான்; கற்பமும், உலகத்தைத் திருத்தும் குணமும் சக்தியால் உணர்வான்; முப்பதாம் ஆண் டில் பிறப்பற்ற நிலையடைவான்; நாற்பதாம் ஆண் டில் கைவல்ய ஞானம் பெறுவான்; ஞான சித்தியால் ஐம்பதில் பொன்னுடலாகிப் பொலிவான். இவன்

ஞான உடலெடுத்த பெரியோன்; மந்திரம், யோகம், வைத்தியம், வாதம், நூல்நுணுக்கம்-சிந்தையில் எண்ணிய உடனே எய்துவான்....."

குழந்தைப் பருவத்திலேயே இராமலிங்கம் இறை யொளியில் நாட்டம் கொண்டு மன ஈடுபாடு கொண்டு விளங்கினர். இந்த உண்மையை தில்லை நடராசப் பெருமானுடைய சன்னதியில் நேரடியாகக் கண்ட அவையைய தீட்சதர் என்ற இறையடியார். "இக் குழந்தை அம்பல வாணரின் அருட் குழந் தையே!" என வியந்து பாராட்டியதாகத் தெரிகிறது.

இராமலிங்கம் பிள்ளைப் பருவத்தைக் கடப் பதற்கு முன்னரே, தந்தை இராமையாபிள்ளை மண் ணுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார். பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு மூத்த மகன் சபாபதியின் மீது விழுந்தது.

வறுமை வாய்ப்பட்டு ஆழிப்புயலில் அகப்பட்ட நாவாயாக தத்தளித்த குடும்பத்தை காப்பாற்ற சபா பதி அரும்பாடுபட்டார். பொன்னேரியில் சிலகாலம் வாழ்ந்த பின்னர் சபாபதி குடும்பத்தினருடன் சென்னைக்கு வந்து குடியேறினர்.

சபாபதி ஆழ்ந்த தமிழ்ப் புலமை மிக்கவர். புராணச் சொற்பொழிவு செய்வதில் வல்லவர். மாணவர் பலருக்கு தமிழ்க்கல்வி ஓதியும், புராணச் சொற் பொழிவுகள் செய்தும் கிடைத்த வருவாயைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தார்.

இராமலிங்கனருக்கு இளவயதில் கல்வியில் நாட் டம் தோன்றவில்லை. இறைவனின் கருணை உள் ளத்தை இளமையிலேயே உணர்ந்து பேரின்பக் கல்வி ஞானத்தைக் கருவிலேயே பெற்றிருந்தது இதற்குக்

காரணமோ என்னவோ. தம்பிக்கு கல்விச் செல் வத்தை ஊட்ட தமையனே முன் வந்து முயன்றார். பலன் பிரமாதமாக அமையவில்லை. தம்முடைய தமிழாசிரியரான காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் இராமலிங்கனாரை அனுப்பி கல்வி கற்க வழி செய்து பார்த்தார். நாட்டுக்கு நல்லது செய்யப் பிறப் பெடுத்திருக்கும் இராமலிங்கனார், வெறும் ஏட்டுக் கல்வியினால் பயனேதும் இல்லை எனக் கருதினாரோ என்னவோ, கல்வி கற்பதில் உற்சாகமே காட்டவில்லை.

இராமலிங்கனாரின் அறைகுறைக் கல்வி நிலையைப் பற்றிக் கூறுகையில் "கல்வி யென்னும் பல் கடல் பிழைத்தும்...." என்கிறார் மாணிக்க வாசகர். அவரும் கல்வி யென்னும் பல் கடல் விழுந்து பின் பிழைத்தார். இராமலிங்கர், விழாமலே இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டார்" என அறிஞர் ம. பொ. சிவஞானம் குறிப்பிடுவது சிறப்பான விளக்கமாகும்.

பள்ளிப்படிப்பில் இவ்வாறு அக்கறையற்றுக் காலத்தை ஓட்டிய இராமலிங்கனார் பின்னாளில் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை கசடறக் கற்றுத் தேர்ந்திருந்ததோடு பிறருக்குப் போதிக்கும் அளவு திறனும் பெற்றுத் திகழ்ந்தார். வடமொழியிலும் ஆழ்ந்தகன்ற புலமை பெற்று விளங்கினார் என்பதனை அவருடைய வரலாறு வாயிலாக அறிகிறோம்! இவர் எங்கு யாரிடம் இத்தகு அறிவினைப்பெற்றார் என்ற விஷயம் யாருக்கும் தெரியவில்லை. கருவிலேயே திரு வுற்றிருந்த கருணைப் பெருங்கடலான இவர் இறைவன் திருவருளால் 'ஓதாதுணர்ந்து' உயரிய கல்வி

ஞானத்தைப் பெற்ருர் என்பதுதான் உண்மை நிலையாகும்!

இந்த உண்மை நிலையை அன்று அண்ணன் சபாபதி அறிந்து கொள்ளவில்லை. கல்வியில் நாட்டமற்ற கடசன், என தம்பியைப்பற்றித் தவருக எண்ணினர். பொறுப்புணர்ச்சி யற்ற முரடன், என நினைத்து மனம் புண்பட்டார். கடுந்தண்டனை தந்தால் ஒருக்கால் புத்தி வரக்கூடுமென எண்ணி ஒரு நாள் இராமலிங்கனுரை வீட்டை விட்டே துரத்தி விட்டார்.

தாயினும் சாலப்பரிந்து மைத்துனன் மீது கரை கட்ந்த அன்பு செலுத்திய சபாபதியின் மனைவியார் இராமலிங்கனுரை அனுதையாக விட்டுவிடவில்லை. கணவர் அறியாது மைத்துனருக்கு உணவளித்து ஆதரவு தந்தார்கள்.

பின்னர் கணவரைச் சமாதானப்படுத்தி, இராமலிங்கனுரின் மனத்திலும் மாற்ற முண்டாக்கி, அவரைக் கல்வி கற்கத் தூண்டினர் அண்ணியார்.

மாடியறை இராமலிங்கனுருக்காக ஒழித்துத் தரப்பட்டது. அங்கிருந்து அவர் கல்வி பயில வேண்டும் என ஓர் ஏற்பாடு செய்யப்பட்டது.

இராமலிங்கனுர் கல்விப் பயிற்சி பெற ஒப்புக்கொண்ட தென்னவோ உண்மை. ஆனுல் மனிதப் பிறவி யெடுத்த யாரையும் தமக்கு ஆசிரியராக அவர் வரிக்கவில்லை. தந்தைக்கு உபதேசித்த கந்தப் பெருமானையே தன் ஆசிரியராக வரித்துக்கொண்டார் என்று வரலாறு செப்புகின்றது.

எழுதி வைக்கப்பட்டிருக்கும் வள்ளலாரின் வரலாறு கூறும் விசித்திர நிகழ்ச்சி இதுதான்:

"மாடியறையிலே நம் பிள்ளைப் பெருமானுர் தெய்வ ஆராதனைக்கு வேண்டிய திரு விளக்கு பழம், திருமலர், சாம்பிராணி, வத்தி, கற்பூரம், கற்கண்டு முதலியவற்றைச் சேகரித்துக்கொண்டு அவ்வறையிலேயே திரு விளக்கை ஏற்றி ஒரு கண்ணுடியை சுவரில் மாட்டி, அக்கண்ணுடிக்கு மாலை சூட்டி பழம் படைத்து கற்பூரம் காட்டி, கண் இமைகொட்டாது அதனையே உற்று நோக்கினுர். அக்கண்ணுடியில் சிறிது நேரத்திற்கெல்லாம், திருத்தணிகைக் கந்த பெருமான் திருவுருவம் தெரியலாயிற்று"

தணிகைப் பெருமான் நேரடியாக தரிசனம் கொடுத்ததும் இராமலிங்கர் உள்ளம் கட்டுவிட்டு நெக்குருக தம்மை மறந்து தணிகைப் பெருமானை வாழ்த்து பாமாலை யொன்று பாடிச் சூட்டினுர். ஆம், இராமலிங்கனுரின் தெய்வத்திரு போதகர் கற்றுத் தந்த முதற்பாடம் அதுதான்!

அந்த நிகழ்ச்சி இராமலிங்கனுரின் ஒன்பதாம் வயதின் போது நிகழ்ந்த அற்புதமாகும்.

அண்ணன் மீதிருக்கும் அச்சம் காரணமாகவும், அண்ணியாரின் அன்புக் கோரிக்கை காரணமாகவும் மாடியறையில் தங்கி படிப்பதாக இராமலிங்கர் ஒப்புக்கொண்டாலும் அண்ணன் சபாபதி எதிர் பார்த்த கல்வியைப் பெருது, தணிகைப் பெருமானிடம் தெய்வீகக் கல்வி பயின்று வந்தாரல்லவா! சாமானியர்களான சபாபதியும், அவர் தம் துணைவியாரும் இந்த உண்மையினை எங்ஙனம் அறிவர்? அறிந்தாலும் நம்பத்தான் இயலுமா? இராமலிங்கர் சோம்பேறித்தனமாக வீண் பொழுது போக்குவதாக தமையனுர் எண்ணி மனம் நொந்தார். அண்ணி

யாரோ, அவ்வளவு எளிதில் அவநம்பிக்கை கொள்ள வில்லை. மறைந்திருந்து கவனித்தபோது இராம லிங்கர் மெய்மறந்த நிலையில் தணிகைப் பெருமா னுக்குச் சூட்டும் பாமாலையை காதாரக்கேட்டு உளம் நெகிழ்ந்தார். தம்கணவர் எண்ணுவதுபோல இராம லிங்கர் சாமானியப் பிறவி அல்லர் என்றும், தெய் வீகப் பிறவி எனவும் உணர்ந்து மைத்துனர்பால் பய பக்தி கொண்டு பெருமை செய்யத் துவங்கினர்.

புராணச் சொற்பொழிவாற்றுவது சபாபதி அவர்களின் தொழில்களில் ஒன்று என ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். சென்னை முத்தியாலு பேட் டையில் திரு. சோமு செட்டியார் என்பவர் வீட்டில் சபாபதி வாரந்தோறும் புராணச் சொற்பொழி வாற்றுவது வழக்கம்.

ஒருமுறை திரு. சோமு செட்டியார் வீட்டில் முக்கியமான தெய்வவிழா ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. விழாவிலே திரு. சபாபதி, ஞான சம் பந்தப் பெருமான் சரித்திரத்தைச் சொல்வதென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழாவன்று திரு. சபாபதி எதிர்பாராதவிதமாக நோய்வாய்ப்பட்டார். சொற்பொழிவாற்றக் கூடிய நிலையில் அவர் உடல் இல்லை; செட்டியார் வருத்தப் படுவதோடு, தம்முடைய செல்வாக்கும் குறைந்து விடக் கூடுமோ என சபாபதி மிகவும் கவலைப் பட்டார்.

இராமலிங்கரின் பெருமையைக் கணவருக்கு எடுத்தியம்ப அருமையான நேரம் வாய்த்ததென சபாபதியின் மனைவியார் கருதினர். கணவரை அணுகி இராமலிங்கர் இரண்டொரு முறை அழகா

கப்பாடுவதைத் தாம் செவி மடுத்ததாகவும், அவரை அனுப்பி விழாவில் இரண்டொரு பாடல்களைப் பாடு மாறு சொன்னால் சோமு செட்டியாரையும், விழா வுக்கு வந்திருக்கும் மக்களையும், திருப்தி செய்வித்த தாக இருக்குமென்றும் எடுத்துரைத்தார்.

தம்பி பாடுவான் என்பதை சபாபதி ஓரளவு தெரிந்து வைத்திருந்தார். ஆனால் விழாவுக்கு வந் திருக்கும் மக்களை மகிழ்விக்கும் அளவுக்கு அவன் பாடக்கூடும் என்று அவர் சற்றும் நினைக்கவே இல்லை. எனினும் தாம் நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்தியை அங்கு சென்று சொல்லவாவது ஓர் ஆள் வேண்டு மல்லவா, என்ற நினைப்பில் தம்பியை அனுப்பி வைத்தார்.

தமையனுக்குப் பதில் வந்த தம்பியை அவ நம்பிக் கையுடன் வரவேற்றார் செட்டியார். இராமலிங்கர் பாடுவார் என்றோ, சொற்பொழி வாற்றுவார் என்றோ அவர் நினைக்கவில்லை; ஏதோ வந்த பையன் ஏதாவது ஒரு பாட்டைப்பாடி விட்டுச்செல்லட்டுமென்ற எண் ணத்தில் இராமலிங்கரை மேடையேற்றிவிட்டார்.

இராமலிங்கர் மேடை யேறியபோது இரவுமணி ஒன்பது.

கணீரென்று இறை வணக்கம் பாடினார். பின்னர் தமையனார் ஒப்புக்கொண்டிருந்த ஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றையே இனிய தமிழில் அழகு சொட்ட எடுத்துரைக்கலுற்றார்.

சிறு பையன்தானே என்று குழுமியிருந்த மக்க ளுக்கு இருந்த அலட்சியப் போக்கு இராமலிங்கர் இறைவணக்கம் பாடிய உடனே அகன்றது. கதை சொல்லத் தொடங்கிய உடனே, ''உண்மையில்

இவன் சிறுவன்தானு அல்லது தணிகைப்பெருமானே மாற்றுரு எடுத்து வந்து மேடைமீது நிற்கிருரோ'' என்று ஐயம் தோன்ற பக்திப் பரவசம் பொங்க கதை கேட்கத் துவங்கினர்.

இரவு மணி பன்னிரெண்டு. ஞானசம்பந்தப் பெருமான் கதையிலே இரண்டு பாகங்கள்தான் முடிவுற்றிருந்தன, மக்களோ காலத்தைப் பற்றிய நினைவையே மறந்து நெஞ்சழிந்து, இராமலிங்கரின் சொற்பொழிவிலே மயங்கிக் கிடந்தனர்.

சோமு செட்டியார் இறைவனையே நேரில் தரிசித்தது போன்று பேருவகையும் பெருமையும் பக்தியும் கொண்டார்; இனி இராமலிங்கரே தொடர்ந்து புராணச் சொற்பொழிவாற்ற வேண்டுமென மக்கள் வற்புறுத்தி வேண்டிக் கொண்டனர். புராணச் சொற்பொழிவு ஒரு புனித இறை பணி என்ற நோக்கத்தில் மக்களின் மன விருப்பத்தை இராமலிங்கனும் ஏற்றுக்கொண்டார்.

தம்பிக்கு ஏற்பட்ட தனிப் பெரும் புகழைக் கேட்டு தமையன் சபாபதி திகைப்பும் வியப்பும் அடைந்தார். இராமலிங்கனுர் ஒரு தெய்வ அவதாரமோ என எண்ணிக் குழப்பமடைந்தார். இராமலிங்கனுரைப் பலமுறை உதாசீனம் செய்ததையும் கடிந்து பேசியதையும் உணவளிக்காமல் விரட்டியதையும் எண்ணி மனம் நொந்தார். தம்பியைக் காணுந்தோறும் ஒருவித பயபக்தி மேலிட அவரிடம் பணிவாகவும் மரியாதையுடனும் நடந்துகொள்ளத் தொடங்கினுர்.

தமையனுர் தம்மிடம் காட்டும் எல்லையற்ற பணிவும் மரியாதையும் இராமலிங்கனுரின் மனத்தை

புண்படுத்தியது. தம்முடைய மரியாதைக்குரிய தமையனார் தம்மிடம் பணிவு செய்து நடப்பது கண்டு மனம் வெதும்பி பெரும்பாலும் வீட்டில் தங்காது வெளியே சுற்றத் துவங்கினார்,

இராமலிங்கனார் அடிக்கடி திருவொற்றியூர் திருப்பதிக்குச் செல்லத் துவங்கினார். ஒற்றியூர் பதி வாழும் தியாகேசப் பெருமானைத் தொழுது அவனருள் பெறவேண்டுமெனத் திட்டமிட்டு சதா திருவொற்றியூர் தியாகேசன் சந்நதியிலே தவங்கிடந்தார் ஒற்றியூர் தியாகேசரின் தாள் போற்றி ஏராளமான பாடல்களைப் பாடினார். அந்தத் தெய்வீகப் பாடல்கள் திருவருட்பாப் பெருநூலில் இரண்டாந் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

இராமலிங்கனார் காளைப் பருவ மெய்தினார். வயது ஏற ஏற கருவிலேயே திருவுற்ற அவருடைய உள்ளமும் கல்விபெரும் தகுதியினைத் தானே பெற்று வளரலாயிற்று. தமிழ் இலக்கிய இலக்கணங்களிலே ஆழ்ந்த புலமை பெற்றுத் திகழலானார். கற்றறிந்தோர் பலர் இராமலிங்கனாரின் தெய்வீக ஞானத்திலே மனத்தைப் பறிகொடுத்தவாறு சதா அவரைச் சூழ்ந்து நின்றனர்.

அந்த நாளில் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரின் கோரிக்கைக் கிணங்க இளஞ் சிறுர்கள் கற்பதற்கென "மனுமுறை கண்ட வாசகம்" என்றொரு நூலை இயற்றினார்;

கல்லாமல் இராமலிங்கர் பெற்றிருந்த பெருங் கல்வி அக்காலப் புலவர் பலருக்கு அவர்மீது அழுக்காறு தோன்றக் காரணமாக இருந்தது. தொழுதூர் வேலாயுத முதலியார் என்பவர் இராமலிங்கனாரின்

கல்வியறிவை பரிசோதிக்க எண்ணி சோதனை யொன்று செய்து இராமலிங்கர் தெய்வ அருள்பெற்ற வள்ளல் என்பதனை உணர்ந்து அவருக்குச் சீடராக மாறிவிட்டார்.

இராமலிங்கனுருக்குத் திருமணம் செய்விக்க அவருடைய தமையனுர் பெரு முயற்சி செய்தார். இராமலிங்கனுரோ தாம் இறைவனைக் காதலித்து மணந்துகொண்டதால் தமக்கு வேறு மனைவினை தேவையில்லை என மறுத்துவிட்டார்.

இராமலிங்கரின் அன்னையாரும், தமையனுரும் உறவினர்களும் அவருடைய உள்ளக் கருத்தை உண ராமல் அவருக்கு நல்ல குலத்து மங்கை நல்லாள் ஒருத்தியை மணமுடித்து வைத்தனர், அந்த அம்மையார் பெயர் தனக்கோட்டி அம்மாள்.

இராமலிங்கரோ தமக்கு மனையாளாக வந்த மங்கையைத் தீண்டவும் மறுத்து அவரைத் துறந்து பரிசுத்தமான பிரம்மசாரிய ஒழுக்கத்தையே வாழ் நாள் முழுவதும் கடைப்பிடித்து ஒழுகினுர்.

இராமலிங்கனுர் பின்னர் தமிழகத்திலுள்ள பல தலங்களுக்கு யாத்திரை செய்தார். சென்றவிட மெல்லாம் இறைவனை அஞ்சலி செய்து ஏராளமான பாடல்களை நெஞ்சுருகப் பாடினுர்.

பின்னர் இராமலிங்க அடிகளார் ஓரிடத்தே நிலை யாகத் தங்கி அமைதியாக இறைபணி செய்யக் கருதினுர். அடிகளாரைப் பொறுத்த மட்டில் இறை பணி என்பது 'மக்கள் பணி' தான்.

ஆரவாரம் நிறைந்த பட்டின வாழ்க்கை அடிக ளாருக்கு வெறுப்பைத் தந்தது. அமைதி நிறைந்த சிற்றூர் ஒன்றில் தங்கிப் பணிபுரிய எண்ணங் கொண்

டார். தமது நோக்கத்துக் கிணங்க ஒரு சிற்றூரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியிலீடுபட்டார்.

பலகாலும் சிந்தித்து தமது மனத்துக்கேற்ற சிற்றூர் வடலூரே என்ற முடிவுக்கு வந்தார்.

அன்னாளில் வடலூர் பொட்டல் காடாகக் கிடந்தது. எனினும் அச்சிற்றூர் திருக்கூடலையாற்றூர் திருமுதுகுன்றம், திருவதிகை, திருவிரும்பை, மாகாளம், திருப்பாதிரிப்புலியூர், தியாகவல்லி ஆகிய புண்ணிய ஸ்தலங்களுக்கு மத்தியிலும், புனித நதிகளான மணிமுத்தாறு, தென்பெண்ணை, வெள்ளாறு, திருக்கடிலம் ஆகியவற்றால் சூழப் பெற்றதுமாகத் திகழ்ந்த காரணத்தால் சூழ் நிலைச் சிறப்பு கருதி வடலூரை அடிகளார் தேர்ந்தெடுத்தார். வடலூரிலிருந்து பார்த்தால் சிதம்பரம் தில்லை அம்பலவாணரின் திருக்கோயில் தெளிவுறத் தெரிந்ததும் வடலூரை இராமலிங்கனர் தேர்ந்தெடுத்ததற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று.

வடலூரில் வாசம் செய்ய முற்பட்ட பிறகு புதிய நெறியையும், புதியதொரு சித்தாந்தத்தையும் புதிய முழக்கத்தையும் புதிய மந்திரத்தையும் வள்ளலார் கண்டார்.

வள்ளலார் 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ற புதியதொரு ஒழுக்க நெறியை உலகுக்களித்தார்.

'ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை' என்ற புதிய சித்தாந்தம் பிறந்தது.

"பசித்திரு, தனித்திரு, விழித்திரு" என்ற மந்திரங்கள் தோன்றின.

அருட் பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி

என்ற புனித முழக்கம் உருவெடுத்தது.

''மண்ணுலகத்திலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமு நான் சகித்திடமாட்டேன்...''

என பிற உயிர்களின் துயர்காணச் சகியாது உருகிய வள்ளல் பெருமான் உயிர்களை வருத்தும் பிணிகளில்—தொல்லைகளில் மிகவும் கொடியது பசிப் பிணிதான் என உணர்ந்தார்.

பசிப்பிணி வந்துற்றபோது மனிதனுயினும் சரி, மற்றெவ்வுயிராயினும் சரி தன் நிலை மறந்து, தடுமாறித் தத்தளித்து வாடுகிறது என்பதையும், உலகத்தில் ஒழுக்கமும், பண்பும், உயர் நெறிகளும், இறை நம்பிக்கையும் மக்களிடை நிலைக்க வேண்டு மாயின் பசிப்பிணி அகலாத நிலையில் அது ஒரு சிறிதும் சாத்தியமில்லை எனவும் உணர்ந்த வள்ளல் பெருமான் பசிப்பிணி ஒழிப்பினை தமது முதற் கடமையாகக் கொண்டு தம்முடைய முழு சக்தி யினையும் ஈடுபடுத்தி உழைக்க முற்பட்டார்.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியருது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்(சு)
இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்!''

என மனம் உருகி உடல் இளைத்து, முயற்சிகள் பல மேற்கொண்டு சத்திய தருமச் சாலை ஒன்றினை வடலூரிலே நிறுவினார்,

எந்த வேளையிலும், எந்த நேரத்திலும் 'பசி' யென்று வந்தோரை, தட்டாது 'புசி'யென உபசரிக்கும் நோக்கத்தில் 1867-ம் ஆண்டில் சத்திய தருமச் சாலையில் சமையல் அடுப்பை மூட்டி வைத்தார் வள்ளல் பெருமான்; பசிப்பிணிக் கெதிராக வள்ளலார் அன்று மூட்டிய அடுப்புத் தீ இன்றளவும் அணையாது எரிந்து, பசித்துவரும் அன்பர்களின் பிணியைத் தீர்த்து வருகின்றது.

அருட்பிரகாச வள்ளலார் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்ற ஓர் அமைப்பினைத் தோற்றுவித்தார்.

1865-ம் ஆண்டில் துவக்கப்பெற்ற இந்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம்,

''ஒத்தாரும் உயர்ந்தாரும்
தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகி உல
கியல் நடத்த வேண்டும''

என்ற உயர் நோக்குடன் திகழ்ந்து செயற்பட்டது.

ஒரே தெய்வ வழிபாட்டினுல் எம்மதமும் சம்மதம் என்ற புது மதக் கோட்பாட்டினுல் இறைவன் அருளைப் பெருவதற்கான வழி வகைகளை இந்த சமரச சன்மார்க்க சங்கத்தின் மூலம் வள்ளலார் மக்களுக்குக்கு உபதேசித்தார்.

தில்லையம்பலவாணர் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த வள்ளல் பெருமான், தில்லையம்பதி சிறுகச் சிறுக போலி பக்தியாளர்களுக்கும் வீண் ஆரவாரங் கட்கும் இடமாகிப் போனதை உணர்ந்து தில்லைக் கூத்தரை தமது இருப்பிடத்தருகே யிருந்து சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினரும் சேர்ந்து தொழு

தெழுவதற்காக 'சத்தியஞான சபை' என்ற பெயரில் புதியதொரு கோயிலை வடலூரில் நிர்மாணித்தார்.

சத்தியஞான சபை என்ற திருக்கோயிலில் சிலை ஏதும் அமைத்து வழிபாடு செய்ய வள்ளலார் எண்ணவில்லை: வள்ளலார் ஐந்தடி உயரமுள்ள சீமைக் கண்ணாடியொன்றைத் தருவித்தார். அக் கண்ணாடியையும், திருவிளக்கு ஒன்றையும் தமது இருப்பிடத்தில் வைத்து முறைப்படி வழிபாடு நடத்தி அவற்றை சத்திய ஞான சபையில் கொண்டு சென்றமைத்தார். மூடநம்பிக்கை கலவாமல், வீண் ஆடம்பர ஆரவாரமின்றி அக்கண்ணாடியையும், திருவிளக்கின் இறைவனின் தத்துவச் சின்னமாகக் கருதி மன நெகிழ்ச்சியோடு ஆண்டவனுடைய தோத்திரங்களை அமைதியோடு, அன்போடு பாடி வழிபட வேண்டும் என சன்மார்க்க சங்கத்தினருக்கு அறிவித்தார்.

சத்திய ஞான சபை தம்முடைய தனி முயற்சி அன்று எனவும், இறைவன் தனக்கிட்ட கட்டளையையே தாம் நிறைவேற்றியதாகவும் வள்ளல் பெருமான் குறிப்பிட்டிருக்கிறார்.

வடலூருக்கு இரண்டு மைல் தொலைவிலுள்ள மேட்டுக் குப்பம் என்ற சிற்றூரில் 'சித்திவளாகம்' என்ற பெயரில் சிறு குடிசையொன்று அமைத்து அதைத் தமது இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந் தார் வள்ளல் பெருமான்.

சித்திவளாகம் வள்ளலாரின இருப்பிடமாக மட்டுமே அமையவில்லை. கருணை வடிவான ஆண்டவனை வழிபடும் கோயிலாகவும், தம்மைப் பின்பற்றும் சன்மார்க்க சங்கத்தினருக்கு உபதேசம்.

செய்யும் இடமாகவும், தம்மைச் சந்தித்து உரையாட வருவோருடன் கலந்துரையாடும் அரங்காகவும் அது விளங்கிற்று; வள்ளலார் உலகிற்கு உபதேசித்த அருமையான தத்துவங்களெல்லாம் 'சித்திவளாக'க் குடிலிலிருந்துதான் பிறந்தவை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மனிதன் தன்னுடைய எச்சரிக்கைக் குறைவின் காரணமாகவே மரணமடைகிறான் என்றும், விழிப்புடனிருந்து சில விதிகளைக் கடைப்பிடித்து ஈசன் திருவடி நிழலை நெஞ்சில் நிறுத்தினால் மரணமிலாப் பெருவாழ்வு வாழ முடியும் என வள்ளல் பெருமான் நம்பினார். நம்பியதை ஊருக்கும் உறுதியுடன் உபதேசித்தார். உபதேசித்த வண்ணமே வள்ளலார் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றார் என்று வள்ளல் பெருமானுடைய வாழ்க்கை வரலாறு கூறுகின்றது.

வள்ளல் பெருமான் மரணமிலாச் பெருவாழ்வு பெற்ற காட்சியினை வள்ளலாரின் தலைமாணவர் கூறியுள்ள விவரப்படி காண்போம்.

> ''....அவர் தமது சீடர்களுக்கு அன்பு நிறைந்த ஆசிகளைக் கூறி, தாம் இருந்த குடிசைக்குள் விரித்திருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டார். அவருடைய உத்தரவின்படி குடிசைக் கதவு பூட்டப்பட்டது. பின்னர் ஒரு வருடத்திற்குப் பிறகு அரசாங்கத்தார் கதவைத் திறந்து பரிசோதித்ததில் அவ்வறை வெறும் அறையாக இருந்தது.
>
> ''அவர் மறையுங்கால் மறுபடியும் தாம் வருவதாகச் சொன்னாரே தவிர வருங்காலம்,

சந்தர்ப்பம் என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரிவிக்கவில்லை.

"அதுவரையில் தாம் இந்தியாவில் மாத்திர மல்லாமல் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் உலக முன்னேற்றத்தைக் குறித்து வேலை செய்யப் போவதாய்த் தெரிவித்தார்.

"இது ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும் தெரிந்ததேயாகும்."

மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற அருட் பிரகாச வள்ளலாரின் மறு அவதாரமே மகாத்மா காந்தி, எனப் பெரு நம்பிக்கையுடன் கூறுகின்றார் பேரறிஞர் ம. பொ. சிவஞானம் அவர்கள்.

திரு. ம. பொ. சி. அவர்களின் உருக்கமான வாசகத்தைக் காண்போம்.

"நான் காந்தியடிகளை அரசியல் துறையில் மட்டுமில்லாமல், ஆத்மார்த்தத் துறையிலும் பின் பற்ற முயன்றுவருபவன். அந்த முயற்சியில் நான் பெற்ற அனுபவத்தைக் கொண்டு அவரை வள்ள லாரோடு ஒப்பிட்டு ஆராய்ந்ததில் தென் பாரதத்தில் தோன்றி மறைந்த வள்ளல் பெருமானுகவே வட பாரதத்தில் பிறந்த கரம் சந்திர காந்தி காட்சி யளித்தார் என்று நம்புகிறேன். ஆம், 'மறுபடியும் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு மறைந்த வள்ளற்பெருமானின் பிரதிநிதியாகவே வடக்கில் பிறந்து பாரதம் முழுவதற்கும் தலைவராக விளங்கிய காந்தியடிகளை நாம் கருத வேண்டும். இது அந்தப் பெரியார்களிடம் நான் கொண்டுள்ள பக்தி காரண மாகப் பிறந்த நம்பிக்கையாக இருக்கலாம். ஆயினும் இந்த நம்பிக்கை என்னளவில் நல்ல

பலனைத் தந்திருப்பதால் என்னைப் போலவே எல்லோரும் நம்ப வேண்டுமென்று'' பிரார்த்திக்கிறேன்....''

பேரறிஞர் ம. பொ. சி. தமது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூலிலே தமது நம்பிக்கைக்கான ஆதாரங்களை மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார். அவற்றை ஆழ்ந்து கற்கும் எவரும் பேரறிஞர் ம. பொ. சி. அவர்களின் நம்பிக்கையைச் சந்தேகிக்க முடியாது: அவரது அந்தப் புனித மயமான நம்பிக்கையினை அப்படியே ஏற்று அருட்பிரகாச வள்ளலாருக்கும், அண்ணல் காந்தியடிகளுக்கும் நமது பக்திபூர்வமான மரியாதையைச் செலுத்தும் வகையில் சிரந்தாழ்த்தி அஞ்சலி செய்கிறோம்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி

## தலையாய உபதேசம்!

பிற உயிர்களின்மேல் பரிவு வேண்டும் என்ற கொள்கை நெடுங்காலமாகவே நமது நாட்டில் விளங்கி வருகிறது. வள்ளலாருக்கு முன்பு வாழ்ந்த ஞானிகள் பலரும் இக்கருத்துக்கு இசைவாக தம் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

புலால் உண்ணாமையை மிக முக்கியமான ஓர் இலட்சியமாக உபதேசித்திருக்கிறார் திருவள்ளுவனார்.

பிற உயிர்களைக் கொன்று தின்னும் தீயவர்கள் மிகக் கொடுமையான நரகக் கொடுமைகளை அனுபவிப்பார்கள் என்று கூறியிருக்கிறது 'திருமந்திரம்'

"கொலைஞர் தம் மனையிலுண்போன் கொலை ஞனேயாவன்" என பிற உயிரைக் கொன்று தின்ப வன் வீட்டில் உண்பதும் பாவமென்ற கருத்தை உப தேசிக்கிறார் சிவஞான வள்ளலார்.

"கொல்லா விரதம் குவலயமெல்லாமோங்க எல் லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே!" எனச் சொல்லுகிறார் தாயுமானார்.

இவ்வாறு முன்னோர் சொன்ன உயர் கருத்தினை அடித்தளமாகக் கொண்டு, அவர்கள் சொல்லாத புதுமைகளை யெல்லாம் செப்பி 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ற அழகு மாளிகையைச் சமைத்திருக் கிறார் அருட்பிரகாச வள்ளலார்.

இக்காலத்தின் மனிதனது உயிருக்குதான் மதிப்பு. மனித உயிர்த்தான் 'உயிர்' என்று மதிக் கப்படுகின்றது. பிற உயிர்களைப்பற்றி கவலைப்படுவ தும் வீண் என்ற மனோபாவம் பெருகி வருகிறது. 'ஜீவகாருண்யம்' என்று சொன்னால் மனித உயிரிடம் கருணையுடன் இருப்பது என்றுதான் பொருள் கொள்ளுகின்றனர். பிற உயிர்களை 'ஜீவன்' என்று யாரும் கருதாததன் விளைவு இது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளல் பெருமான் இறைவன் அருளால் உலகில் தோன்றிய ஜீவராசிகள் எத்தனையோ அத்தனை உயிர் களின்மீதும் கருணைகாட்டிக் கவலைக்கொள்ள வேண்டுமென திருவுளம் கொண்டார்.

பிற உயிர்களிடம் காருண்யம் கொண்டு ஒழுகு வதை மனிதனது தலையாய ஒழுக்கம் என எடுத் துரைத்தார்.

இறைவனின் திருவடிகளைச் சரணடையும் சரியான மார்க்கம் ஜீவகாருண்ய ஒழுக்கந்தான் என அறுதியிட்டுக் கூறினார்.

'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்பது உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க 'ஆன்ம லாபம்' என்ற உண்மையினையும் உபதேசித்தார்.

'புண்ணியம்' என்பது 'ஜீவகாருண்யம்' ஒன்றே என்றும், 'பாவம்' என்பது ஜீவகாருண்யமில்லாமை என்றும் புது வியாக்கியானம் சொன்னார்.

> "ஜீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கையுண்மை ஏக தேசங்களாய் சர்வ சக்தியுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால் ஓர் உரிமையுள்ள சகோதரர்களேயாவர். சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தில் துக்கப் படுகின்றபோதும்—துக்கப்படுவாரென்று அறிந்தபோதும்—அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகலில்—ஒரு ஜீவன் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும்—துக்கம் அனுபவிக்குமென்று அறிந்தபோதும், மற்றொரு ஜீவனுக்கு, உருக்கமுண்டாவது ஆன்ம உரிமை"

என்று அருளி ஆன்ம நேய ஒருமைப்பாட்டை வற்புறுத்தினார்

இங்ஙனம் வள்ளல் பெருமானின் உபதேசப் பொன் மொழிகளால் "ஜீவகாருண்ய ஒழுக்கம்" தலையாயதாகத் திகழுவதால், அந்தத் தலையாய உபதேசப் பொன் மொழியினை அடுத்து பக்தியுடன் உணருவோம்.

# வள்ளலார் அருளிய
# ஜீவகாருண்ய ஒழுக்கம்

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப் பிறப்பினுல் அடையத்தக்க ஆன்ம லாபத்தைக் காலமுள்ளபோதே அறிந்து அடைய வேண்டும்.

1. அந்த ஆன்ம லாபம் எது? என்று அறிய வேண்டில்:—

எல்லா அண்டங்களேயும், எல்லாப் புவனங்களேயும், எல்லாப் பொருள்களேயும், எல்லா ஜீவர்களேயும், எல்லா ஒழுக்கங்களேயும், எல்லாப் பயன்களேயும், தமது பூரண இயற்கை விளக்கமாகிய 'அருட் சத்தியால்' தோன்றி விளங்க, விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கை உண்மை வடிவினராகிய 'கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற 'ஒப்பற்ற பெரிய வாழ்வே' இந்த மனிதப் பிறப்பினுல் அடையத்தக்க ஆன்ம லாபம்'என்று உண்மையாக அறிய வேண்டும்.

2. இயற்கை இன்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனுல் அடையக்கூடும் என்று அறிய வேண்டில்:—

கடவுளின் இயற்கை விளக்கமாகிய 'அருளேக் கொண்டே' அடையக்கூடும் என்று அறிய வேண்டும்.

3. கடவுளின் இயற்கை விளக்கமாகிய 'அருளே எதனுல்' பெறக்கூடும்? என்று அறிய வேண்டில்:—

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினுல் கடவுள் அருளைப் பெறக்கூடுமல்லாது, வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறிதல் வேண்டும்.

4. கடவுள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தினுல் பெறக்கூடுமல்லாது வேறெந்த வழியாலும் பெறக்கூடாதென்பது எப்படி? என்னில்:—

அருளென்பது: கடவுள் தயவு, கடவுள் இயற்கை விளக்கம், ஜீவகாருண்யம் என்பது— ஜீவர்கள் தயவு, ஜீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம், இதனுல் தயவைக்கொண்டு தயவைப் பெறுதலும் விளக்கத்தைக்கொண்டு விளக்கத்தைப் பெறுதலும் கூடும். வேருென்றினுல் பெறக்கூடாமை அனுபவ மாகலின், ஜீவகாருணயத்தைக்கொண்டு அருளைப் பெறுதல் கூடும். வேருென்றினுலும் பெறக் கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாமென்று அறிய வேண்டும்.

அருளைப் பெறுவதற்கு ஜீவகாருண்யமே வழியா தலால், ஞானவழி என்பதும்-சன்மார்க்கம் என்பதும் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றும்—அஞ்ஞான வழி என்பதும், துன்மார்க்கம் என்பதும்—ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமையென்றும் அறியப்படும்.

ஜீவகாருண்யம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனுக நின்று விளங்கும். அந்த உபகார சக்தி யால் எல்லா நன்மைகளும் தோன்றும் ஜீவகாருண் யம் மறையும்போது அறிவும் அன்பும் உடனுக மறையும். அதனுல் உபகார சத்தி மறையும்—உப கார சத்தி மறையவே எல்லாத் தீமைகளுந் தோன் றும்.

ஆதலில், புண்ணியமென்பது ஜீவகாருண்ய மொன்றே யென்றும் பாவமென்பது. ஜீவகாருண்ய மில்லாமை யொன்றே யென்றும் அறியப்படும்:

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந்தரும் (கோறல் – கொல்லுதல்)

ஜீவகாருண்ய ஒழுக்கத்திஞல் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும் ஜீவகாருண்ய ஒழுக்கத் திஞல் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும்-இவ் விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்துப் பூர்த்தியடைந்த சாத்தியர்களே ஜீவன் முத்தரென்றும்-அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயம் ஆவார்கள் என்றுஞ் சத்திய மாக அறியவேண்டும்.

5. ஆஞல் ஜீவகாருண்ய ஒழுக்கமென்பதென்? எனில்:-

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டா கின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழி பாடு செய்து வாழ்தலென் றறிய வேண்டும்.

6. ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது உண்டாகும்? என்னில்:—

ஜீவர்கள், பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால்-துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதாயினும்-கேட்ட போதாயினும் இவ் வாறு உண்டாகுமென்று அறிந்தபோதாயினும்— ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறிய வேண்டும்.

7. ஜீவகாருண்யம் உண்டாவதற்கு உரிமை எது? என்னில்:-

ஜீவர்களெல்லாம்-ஒரு தன்மையாகிய இயற்கை யுண்மை ஏக தேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால்—ஓர் உரிமை யுள்ள சகோதரர்களே யாவர். சகோதரர்களுள் ஒருவர்-ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும் துக்கப்படுவாரென்று அறிந்தபோதும்அவரைத் தமது சகோ.தரரென்று கண்டமற்ெருரு சகோதரருக்கு-உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகலில்—ஒரு ஜீவன்துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோது—துக்கப் படுமென்று அறிந்தபோதும், மற்ெருரு ஜீவனுக்கு உருக்க முண்டாவது-பழைய ஆன்ம உரிமையென்று அறிய வேண்டும்.

8. ஜீவர்கள் துக்கப்படுகின்றதைக் கண்ட போதும், சிலர் ஜீவகாருண்யமில்லாமல் கடின சித்தர்களாயிருக்கின்ருர்கள். இவர் களுக்குச் சகோதர உரிமையில்லாமற் போவது ஏன்? என்னில்:-

துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென் றும்,துக்கப்படுகிருரென்றும்—துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்ம அறிவு என்கிற கண்ணனது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளி மழுங்கினபடி யாலும்-அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணுடிகளும் பிர காச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும்—கணடறியக் கூடாமையாயிற்று. அதனுல் சகோதர உரிமையிருந்தும் ஜீவ காருண்யம் உண்டாகாமலிருந்ததென்று அறிய வேண்டும். இதனுல் ஜீவகாருண்யமுள்ளவர் ஆன்ம திருஷ்டி விளக்க முள்ளவரென்று அறியப்படும்.

9. ஜீவர்களுக்குப் பசி, தாகம், பயம் முதலிய வற்றால் வரும் துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணனேந்திரிய அனுபவங் களல்லாது ஆன்ம அனுபவங்களல்ல. அதனால் ஜீவகாருண்யங் கொள்வதில் விசேஷ பிரயோசனம் இல்லையே? என்னில்:-

இந்தத் தூல தேகத்தில், ஜீவனாக இருக்கின்ற ஆன்மாவும் அறிவுக்கறிவா யிருக்கிற கடவுள் இயற்கை விளக்கமுந்தவிர, கரணம் இந்திரியம் முதலிய மற்றவைகளெல்லாங் கருவிகளாகிய தத்துவ சடங்களே யல்லாது சித்துக்களல்ல. ஆகலின், சுக துக்கங்களைச் சடங்கள் அனுபவிக்க அறியா, செம் மண்-சந்தோஷித்தது. துக்கித்தது என்று சொல்லப் படாது. அதுபோல் மனம்-சந்தோஷித்தது-துக்கித் தது என்று சொல்லப்படாது. செம்மண்ணினால் தேக வாழ்க்கைக்கு வீடு கட்டிக் கொள்வது போல மனம் முதலான கரணேந்திரியங்களால் ஜீவ வாழ்க் கைக்குக் கடவுளால் கட்டிக்கொடுக்கப்பட்டதேகம்-ஒரு சிறிய வீடாகும். இன்ப துன்பங்களை வீட்டிலிருக் கிறவன் அனுபவிப்பானல்லது, வீடு அனுபவிக்க மாட்டாது. அன்றியும் காசத்தினால் ஒளி மழுங்கப் பட்டு உபநயனங்களாகிய கண்ணாடிகளால் பார்க் கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது அக்கண்கள் நீர் சொரியுமே யல்லாது கண்ணாடி நீர் சொரியமாட்டாது. ஆகலின் ஆன்ம திருஷ்டிக்கு உப நயனங்களாக இருக்கின்ற மனம் முதலான கருவிகள் சுக துக்கங்களை அனுபவிக்கமாட்டா. ஆன்மாவே அனுபவிக்குமென்று அறியவேண்டும்.

10. ஒரு ஜீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது. துக்கம் நேரிட்ட போது மனம் தளர்கின்றது. ஆதலால் சுக துக்கங்களை அம்மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ? என்னில்:-

அறியப்படாது. பளிங்கினாற் செய்த வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேக விளக்கமும், தேகச் சோர்வும் அந்தப் பளிங்கு வீட்டில் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுவது போலும், கண்களின் மலர்ச்சியும், சோர்வும் அக்கண்களி லிட்ட உப நயனங்களில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவது போலும், சுக துக்கங்களால் ஆன் மாவுக்கு உண்டாகிற மகிழ்ச்சியுந் தளர்வும், மனம் முதலான கரணேந்திரியங்களில் பிரதிபலித்தும் புறத்தில் தோன்றுகின்றன. ஆகலின் சுக துக்கங்கள் ஆன்மாவுக்கே அனுபவமென்றும் சுக துக்கங்களை அறிந்து அனுபவிப்பதற்குக் கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிகளாகுமென்றும் அறிய வேண்டியது.

11. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களில் அனேகர் பசி, தாகம், பயம் முதலியவற்றால் மிகவும் துன்பப்படுகின்றது ஏன்? எனில்:-

முன்தேகத்தில் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை விரும்பாமல் கடின சித்தர்களாகி துன் மார்க்கத்தில் நடந்த ஜீவர்களாதலால் கடவுள் விதித்த அருளாக் கினைப்படி பசி, தாகம், பயம் முதலியவற்றால் மிக வுந்துன்பப்படுகிறார்களென்று அறிய வேண்டும்.

12. முன்தேகம் உண்டென்பது எப்படி? என்னில்:-

ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்ய வந்த சமுசாரி அதற்கு முன் வேறொரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்திருந்தானல்லது வீடில்லாமல் குடித்தனஞ் செய்மாட்டனென்றும் இப்போது வந்த வீட்டிலுங் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு வீட்டில் குடிபோவான் என்றும் அறிவது போல் இந்தத் தேகத்தில் ஆகாரக்கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த ஜீவன், இதற்கு முன்னும் வேறொரு தேகத்தில் அந்தக் கூலியைக் கொடுத்து ஜீவித்திருந்தானல்லாது, தேமில்லாமல் ஜீவித்திருக்க மாட்டானென்றும் இந்தத் தேகத்திலுங் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு தேகத்தில் குடி போவானென்றும் துணிய வேண்டும். ஆதலால் முன்னும் பின்னும் ஜீவர்களுக்குத் தேகங்கள் நேரிடும் என்று அறிய வேண்டும்.

**13. ஜீவர்கள் முன் தேகத்தில் செய்த பாபகர்மங்கள் இந்தத் தேகத்திலும் வருமென்பது எப்படி? என்னில்:-**

ஒரு சமுசாரி முன் குடுத்தனஞ் செய்திருந்த வீட்டில் தன் தலைவன் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கர்களை வருவித்து அவர்களோடு கூடிப்பழகியிருந்தானுனல், அந்தச் சமுசாரி அந்த வீட்டை விட்டு வேறொரு வீட்டில் குடிவந்த காலத்தில், அந்தத் துன்மார்க்கர்கள் இந்த வீட்டிலும் வந்து, அவனுடன் பழக்கஞ் செய்வார்கள். அதுபோல், ஒரு ஜீவன் முன் குடியிருந்த தேகத்தில் கடவுள் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கத்தால் பாபகர்மங்களை விரும்பிச் செய்திருந்தானுனல், அந்த ஜீவன் வேறொரு

தேகத்தில் வந்த போதும் அந்தப் பாபகர்மங்கள் இப்போது வந்த தேகத்திலும் வந்து அந்த ஜீவனைச் சேருமென்று அறிய வேண்டும்.

14. முன் பிறப்பில் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களை இந்தப் பிறப்பில் பசி, தாகம், பயம் முதலியவற்ருல் துக்கப்படச் செய்வது கடவுள் அருளாக்கினை நியதி என்ருல், அந்த ஜீவர்கள் விஷயத்தில் காருண்யம் வைத்து ஆகாரம் முதலியவை கொடுத்து அவர்கள் துக்கத்தை மாற்றுவது கடவுள் அருளாக்கினைக்கு விரோதமாகாதோ? என்னில்:-

ஆகாது. அரசன் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்து கால்களுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச் சாலையில் இருக்கின்ற பெரிய குற்றவாளிகளுக்கும் தன் சேவர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்ருன். அதுபோல் கடவுள் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பல வகையால் பந்தஞ் செய்யப்பட்டு நகரத்திலிருக்கின்ற பாவிகளுக்கும் தன் பரிவார தேவர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கிருர். அரசன் தன் கட்டளைப்படி நடவாமல் வேறுபட்ட சாதாரண குற்ற முடையவர்களைத் தன்ருல் அவர்கள் பெறத்தக்க லாபத்தை பெறவொட்டாமல் உத்தி யோகத்தினின்றும் நீக்கி அவர்களுக்கு நல்லறிவு வருவிக்கின்ற நிமித்தம் அவ்விடத்தைவிட்டு வேறிடங்களில் வெளிப்படுத்துகின்ருன். அவர்கள் உத்தி யோகமிழந்தபடியால் சுகபோஜன முதலிய போகங்களை யிழந்து ஊர்ப்புறங்களிற் போய் ஆகாரம் முதலியவை குறித்து அலைந்து வருந்துகின்றபோது

தயவுள்ளவர்கள் கண்டு, ஆகார முதலியவை கொடுக்கின்றார்கள். அதைக் கேட்ட காலத்திலும், கண்ட காலத்திலும் கொடுத்தவர்களை இரக்கமுள்ள நல்ல சமுசாரிகளென்று சந்தோஷித்து உபசரிக்கின்றானேயல்லது கோபிக்கிறானில்லை.

அதுபோல கடவுள் தம் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய ஜீவர்களைத் தமது சக்தியால் அவர்கள் பெறத்தக்க சுகங்களைப் பெறவொட்டாமல் தாம் கொடுத்த சௌக்கிய புவனபோகங்களை விடுவித்து அந்த ஜீவர்களுக்கு நல்லறிவு வருவிக்கும் நிமித்தம் அந்தத் தேகத்தினின்றும் நீக்கி வேறொரு தேகத்தில் விடுகின்றார். அந்த ஜீவர்கள் சௌக்கிய புவன போகங்களை இழந்தபடியால், சௌக்கிய போஜன முதலியவற்றையிழந்து வேறு வேறிடங்களில் ஆகார முதலியவை யில்லாமல் வருந்தும்போது தயவுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக் கண்டு ஆகார முதலியவை கொடுத்தால் அப்படிக் கொடுத்தவர்களை நல்ல இரக்கமுள்ளவர்கள், மேன்மேலுஞ் சுகத்தையடையக் கடவார்களென்று சந்தோஷித்து உபசரிப்பாரல்லது கோபிக்க மாட்டார். ஆதலால், கடவுள் அருளாக்கினைக்கு ஜீவர்களிடத்து ஜீவர்கள், காருண்யம் வைப்பதே சம்மதமென்று உண்மையாக அறியவேண்டும்.

**15.** இந்த ஜீவகாருண்யத்தால் இகலோக ஒழுக்கம் வழங்குகின்றது. ஜீவகாருண்ய மில்லையாகிய இகலோக ஒழுக்கம் எவ்வளவும் வழங்க மாட்டாதென்று அறிய வேண்டும். எப்படி? என்னில்:-

ஜீவகாருண்ய மில்லாதபோது-அறிவும் அன்புந் தோன்ற. அவை தோன்றாதபோது கண்ணோட்டமும் ஒருமையும், உபகாரமும் விளங்கா. அவை விளங்காத போது, வலிய ஜீவர்களால் எளிய அவர்கள் ஒழுக்கம் பொறுமை முதலானவைகளால் தடைப்பட்டழிந்து போம். பின்பு வலிய ஜீவர்கள் ஒழுக்கங்களும், தாமச ஒழுக்கங்களாகி ஒருவரொழுக்கத்தால் மற்றொருவரொழுக்கம் மதத்திறற் சோர்வடைந்து மாறுபட்டழிந்துபோம். ஜீவகாருண்ய ஒழுக்கஞ் சிறிதுமில்லாத புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் வ்ழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்க வேயில்லை. அதுபோல், ஜீவகாருண்யமில்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோகம் ஒழுக்கம் வழங்கவேமாட்டாதென்று அறியவேண்டும்.

*16. பரலோக ஒழுக்கமும் ஜீவகாருண்யத்தால் வழங்குகின்றது. இது இல்லையாயின் பரலோக ஒழுக்கமும் வழங்கமாட்டாது எப்படி? என்னில்:-*

ஜீவகாருண்யம் இல்லாதபோது அருள் விளக்கந் தோன்றாது. அது தோன்றாதபோது, கடவுள் நிலை கைகூடாது. அது கூடாதபோது, முத்தியின்பம் ஒருவரும் அடைய மாட்டார்கள். அடையாத பட்சத்தில் பரலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென்று அறிய வேண்டும்.

*17. ஜீவகாருண்ய ஒழுக்கம் மிகவும் வழங்காமையால் துன்மார்க்கப் பிறவியே பெருகி யெங்கும் புல்லொழுக்கங்களே வழங்குகின்றன. எப்படி என்னில்:-*

ஜீவகாருண்யமில்லாத கடின சித்தர்களெல்லாம் அவரவர் கடின செய்கைக்குத் தக்கபடி, சிலர் நரகவாசிகளாகவும், சிலர் சமுத்திர வாசிகளாகவும், சிலர் ஆரண்ய வாசிகளாகவும், சிலர் புலி கரடி, சிங்கம், யாளி, யானை, கடமை, கடா, பன்றி, நாய், பூனை முதலிய துஷ்ட மிருகங்களாகவும், சிலர் பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்களாகவும், சிலர் முதலை, சுறா முதலிய கடின ஜந்துக்களாகவும், சிலர் காக்கை கழுகு முதலிய சண்டாளங்களாகவும் சிலர் எட்டி, கள்ளி முதலிய அசுத்த தாவரங்களாகவும் பிறந்திருக்கின்றார்கள். ஆதலால் புல்லொழுக்கங்களே மிகவும் வழங்குகின்றன. என்றறிய வேண்டும்.

ஜீவகாருண்யம் கடவுளருளைப் பெறுவதற்கு முக்கிய சாதனமென்பது மல்லாமல், அதுவே அந்த அருளின் ஏகதேச விளக்கமென்றும் அறியவேண்டும். ஜீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கம். ஆதலால், அந்த இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவேமாட்டாது.

18. ஜீவகாருண்யத்திற்கு முக்கியமான லக்ஷியம் எது? என்னில்;—

ஆன்மாக்களெல்லாம் இயற்கை உண்மை ஏகதேசங்களாயினும் இயற்கை விளக்கமாகிய அருள் அறிவுக்கறிவாய் விளங்குதற்கு ஒற்றுமை உரிமை இடங்களாயும் இருக்கின்றன வென்றும், அந்த ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரிப்பதற்குப் பூதகாரிய தேகங்களே உரிமையாக இருக்கின்றன வென்றும், அந்தத் தேகங்களில் ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரியாவிடில் ஆன்ம விளக்கம் மறைபடுமென்றும்,

அதனுல் அருள் விளக்கம், வெளிப்படாதென்றும் அப்போது மூட முண்டாகுமென்றும், அதுவே ஆன் மாக்களுக்குப் பந்தமாகுமென்றும் அதுபற்றி அவ சியப் பூதகாரிய தேகம் வேண்டுமென்றும், பூதகாரிய தேகங்களுக்கு மாயை முதற்காரணமாதலால் அந்த மாயையின் விகற்ப ஜாலங்களாகிய பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என்பவை களால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடுமென்றும், அப்படி அபாயங்கள் நேரிடாமல் கரணேந்திரிய சகாயங்களைப் பெற்ற தம்மறிவைக் கொண்டு சர்வ ஜாக்கிரதையோடு முயற்சி செய்து தடுத்துக் கொள்வதற்குத் தக்க அல்ப சுதந்திரம் ஜீவர்களுக்கு அருளால் கொடுக்கப்பட்டதென்றும் அந்தச் சுதந்திரத்தைக் கொண்டு ஜீவர்களெல்லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்ம லாபத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யக் கடவ ரென்றும், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ள மாட்டாமல் வருந்துகிற ஜீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத்தக்க சுதந்திரமுள்ள ஜீவர்கள் காருண்யத்தால் நிவர்த்தி செய்விக்க வேண்டுமென்றும்,

(அபரகாருண்யம்)

அப்படி நிவர்த்தி செய்விப்பதில் பசியினுல் வருந் துன்பமுங் கொலையினுல் வருந்துன்பமுந் தவிர மற்ற வைகளால் வருந்துன்பங்களை மாற்றுவது அபர ஜீவ காருண்யமாதலால், இவ்வுலக இன்பத்தை மாத்திரம் சிறிதுண்டு பண்ணுமென்றும்;

(பர். ஜீவகாருண்யம்)

பசியினுல் வருந்துன்பத்தையும் கொலையினுல் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பரஜீவ காருண்யம் ஆதலால், இவ்வுலக இன்பங்களையும், அளவிறந்த சித்தியின்பங்களையும் எக்காலத்தும் அழியாத முக்தியின்பத்தையும் அருளாலடையப்படுமென்றும் ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் அன்னிய ஜீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்திரமும், அறிவு மிருந்தும், அவ்வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு, இவ்வுலக இன்பத்தோடு மோக்ஷ இன்பத்தையனுபவிக்கின்ற சுதந்திரம் அருளாலடையப்படுவதில்லையென்றும், தற்காலத்தில் அனுபவிக்கின்ற புவன போக சுதந்திரங்களையும், இழந்து விடுவாரென்றும் கடவுள் வேதத்தில் விதித்திருக்கின்றபடியால் ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி, கொலையென்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க அறிவும் சுதந்திரமுமில்லாத ஜீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்ததி செய்விக்கத்தக்க அறிவும் சுதந்திரமும் உள்ள ஜீவர்கள் வஞ்சியாமல் தயவினுல் நிவர்த்தி செய்விப்பதே ஜீவ காருண்யத்திற்கு முக்கியமான லட்சியமென்றும் அதில் சத்தியமாக நம்பிக்கை வைத்துப் பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கியும், கொலைப்படும் ஜீவர்களுக்குச் செய்வகையால் கொலை நீக்கியும் திருப்தி இன்பத்தை யுண்டுபண்ணுவதே மேலான பிரயோஜனமென்றும் அறியவேண்டும்.

19. பசி, கொலை, பிணி, தாகம், எளிமை, பயம்
இச்சை யென்பவைகளால் வரும் அபாயங்

களை நிவர்த்தி செய்விப்பது விதியாக இருக்கவும், இவ்விடத்துப் பசியினாலும், கொலையினாலும் வரும் அபாயங்களை மாத்திரம் நிவர்த்தி செய்விப்பது விசேஷமென்று குறித்தது ஏன்? என்றறிய வேண்டில்:—

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் அபர ஜீவகாருண்யமென்றும், பர ஜீவகாருண்யமென்றும் இருவகையாம். அவற்றில் பசி நீக்கலும் கொலை நீக்கலும் பர ஜீவகாருண்யமாதலால் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென்றறிய வேண்டும்.

(தாகம்)

அன்றியும் பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவர்கள். தாகம் நீங்குதற்குத் தண்ணீர் கொடாமலிரார்கள். தண்ணீர் கொடுப்பது பிரயாசமுமல்ல. தண்ணீர், ஏரி, குளம், கால்வாய் முதலான இடத்துமிருக்கின்றது. தாகத்தால் மாற்றிக் கொள்ளத் தக்க ஏகதேச அபாயம் நேரிடுமேயல்லாது, அதனால் தேகத்திற்கு ஆனி நேரிடாது. பசியினால்—மாற்றிக் கொள்ளக் கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும்.

(பிணி)

பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விக்கத்தக்க தயவுடையவருக்குப் பிணியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயவுண்டாகாமலிராது. பசி மிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன. ஆகாரப் பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன. பிணிக்கு வேறு மருந்து கொடுப்பினும் புத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு

அவசியமான ஆதாரமாயிருக்கின்றது. பிணியோடு தேகத்தை நெடுநாள் வைத்திருக்கக்கூடும். ஒரு நாளாகிலும் ஆகாரமில்லாமல் தேகத்தை வைத்திருக்கக் கூடாது.

(இச்சை)

பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்குவிக்கின்ற தயவுடையவர்களுக்கு இச்சையால் வருந்துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயவு வராமலிராது. ஜீவர்களுக்கு உள்ளபடி பசி நேரிடுமாகில் ஆகாரத்தி லல்லது மற்றொன்றிலும் இச்சையேயிராது. ஆகாரங் கிடைக்கில் உண்டு பசி தீர்ந்தவர் தம் இச்சையைச் சிறிய முயற்சிகளால் முடித்துக் கொள்ளவுங்கூடும். அல்லது சமாதானஞ் செய்து கொள்ளவுங் கூடும். இச்சையோடு பல நாள் தேகத்தை வைத்திருக்கலாம். பசியோடு ஒரு நாளும் வைத்திருக்க முடியாது.

(எளிமை)

பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுள்ளவர்களுக்குச் சுதந்திரமற்ற ஜீவர்களது எளிமையை நீக்கத் தயவு வராமலிராது. பசியினுல் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை. எளிமையைச் சில நாள் சென்று மாற்றிக் கொள்ளக்கூடும். பசியை அவ்வாறு மாற்றிக் கொள்ளக்கூடாது. எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக்கூடும். பசியோடு வைத்திருக்க முடியாது.

(பயம்)

பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயவு

வராமலிராது. பசியினால் வரும் பயத்திற்கும், கொலையினால் வரும் பயத்திற்கும் மேற்பட்ட பயமேயில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக் கொள்ளக்கூடும். பசியை உபாயத்தால் நீக்கிக் கொள்ளக்கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம். பசியோடு வைத்திருக்கப்படாது. பசியினால் வரும் அவத்தைகளும், துன்பங்களும் தம்முள் ஒத்திருக்கின்றன. ஆதலால் பசியினால் வருந்துன்பத்தையும் கொலையினால் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லட்சிய மென்றறிய வேண்டும்.

20. பசியினால் வருந்துன்பத்தை நீக்குதலும் கொலையினால் வருந்துன்பத்தை நீக்குதலும் ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷியமாக இருக்கவும் இவ்விடத்தில் பசி நீக்குதலை மாத்திரம் அடிக்கடி வலியுறுத்துவது ஏன்? எனில்:–

ஒரு ஜீவன் பசியால் கொல்லப்படுமென்பதை யறிந்து காருண்யத்தால் பசியை நீக்கி உயிர் பிழைக்கும்படி செய்பவர் வேறு வகையால் உயிர்க்கொலை செய்ய நேரிட்டால் அதற்கிரங்கி அந்தக் கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாமலிரார்கள். கொலையால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்யாதவர்கள் பசியால் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விக்கத்தக்க தயவுடையவர்களாகார்கள். பசியால் வரும் கொலையை ஆகாரத்தாலன்றி வேறு வகையால் நிவர்த்தி செய்விக்கப்படாது. பகை முதலியவற்றால் வருங்கொலையை, அநேக உபாயத்தால் நிவர்த்தி செய்விக்கக் கூடுமாதலால், கொலையால் வருந்துன்

பத்தைப் பசியால் வருந்துன்பத்திலமைத்து அடிக்கடி வலியுறுத்துகின்ற தென்றறிய வேண்டும்.

அன்றியும் தாகத்தால் வருந்துகின்றவரும்-பிணியால் வருந்துகின்றவரும் இச்சையால் வருந்துகின்றவரும்—எளிமையால் வருந்துகின்றவரும்—பயத்தால் வருந்துகின்றவரும்—பசிவருத்த முண்டாகும்போது அவ்வருத்தங்களையெல்லாம் மறந்து பசிவருத்தம் மேற்பட்டு, ஆகாரந்தேட முயற்சி செய்கின்றார்கள்.

அன்றி அரசன் ஆக்கினையால் கொலைக் குற்றம் பற்றிக் கொலை செய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும் பசி வந்தபோது தன் பயத்தையுந் துன்பத்தையும் மறந்து அந்தப் பசியை மாற்றிக்கொள்ள முயலுகிறான்:

வைத்தியரால் தாம் இறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்துகொண்ட வியாதியாளரும், மூப்பாளரும் பசி வந்தபோது தமது துன்பத்தை மறந்து பசி நீக்க முயலுகின்றார்கள்.

பசிக்குத் தயவினால் ஆகாரங் கொடுக்கத் துணிந்தவன் வேறு வகையால் ஜீவர்கள் இம்சைப்பட்டழிவதற்குச் சம்மதிக்கவே மாட்டான். ஆதலாலும், பசியால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விக்கிற தருமத்தை அடிக்கடி வலியுறுத்துவ தென்றறிய வேண்டும்.

21. பசியினால் வருங் கெடுதி எல்லா ஜீவர்களுக்குந் தேக நாசஞ் செய்வது உண்மையானால் எல்லா ஜீவர்கள் பசியையுமறிந்து நிவர்த்தி செய்விக்க வேண்டும். அப்படி நிவர்த்தி செய்விக்கத் தொடங்கில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர், மனிதர், நரகர்,

மிருகம் பறவை, ஊர்வன, தாவரம் என்கிற இவ்வெழுவகைப்பட்ட அளவிறந்த பேதங்களுடைய ஜீவர்களது பசியை அறிந்து நீக்குவது அசாத்தியமாகுமே? என்னில்:—

தேவர்கள்—மனித சுதந்திரத்தினும் மேற்பட்ட சுதந்திரமுடையவர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியினாலேயே மாற்றிக்கொள்ளத் தக்க வல்லப முடையவர்களாதலால்—அவர்கள் பசியைக் குறித்து மற்றவர் யோசிப்பது அவசியமல்ல வென்றும் தேவர்களுக்கும் பசி நேர்ந்தால் துன்பமுண்டாகுமே யென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்,

நரகர்—நாம் பசியாற்றுவிக்கத்தக்க இடங்களில் இல்லாமல் வேறிடங்களிலிருக்கின்றபடியாலும், நரகர் பசிக்குத் தண்டனைப் பரிவாரங்களால் பசியாற்றுவித்தலாலும், அந்நரகர் பசியைக் குறித்து யோசிப்பது அவசியமல்லவென்றும், அந்நரகரும் பசி நேரிடில் வருந்துவார்களேயென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்;

ஊழ்வகையினால் சிறிதுஞ் சுதந்தரமில்லாத மரம், புல் முதலிய தாவரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக்கின்ற தாவர வர்க்கங்களுக்குப் பசி குறித்து நீர் விடுவது அவசியமென்றும், மற்றைத் தாவர வர்க்கங்களெல்லாம் அருள் நியதியின்படி ஆகாரங் கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றனவாதலாலும், அவைகளுக்கெல்லாம் பசியறிந்து ஆகாரங் கொடுப்பது, நமது சுதந்தரமல்ல, கடவுள் சுதந்தரமென்றும் அவை குறித்து யோசிப்பது அவசியமல்லவென்

றும் ஆகாரமில்லாவிடில் வருந்துமேயென்று இரங்குதல் மாத்திரம் அவசியமென்றும்,

நிலத்திலும், நீரிலும் ஊறுகின்ற உயிர்களுக்கும், பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் அவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி அருள் நியதி ஆகாரங் கொடுப்பிக்க உண்டு பசியாறுகின்றனவென்றும், அவ்வவைகளுக்குத் தக்க ஆகாரம் அறிந்து கொடுப்பது தனது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தரமென்றும், அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தால் சம்பாதித்துக்கொள்ளுகின்ற பசு, எருது, எருமை கடா, ஆடு, குதிரை முதலிய சில மிருகங்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியாற்றுதல் அவசியமென்றும்;

மனிதர்களில் ஆண் மக்கள் பெண் மக்கள் என்றிரு வகைப்பட்ட எல்லா மனிதர்களுக்கும், பசியால் வரும் நஷ்டங்களும், துன்பங்களும், பசி நிவர்த்தியால் வரும் லாபங்களும் இன்பங்களும் பொதுவில் ஒரு தன்மையாயிருத்தலாலும், பசியால் வரும் நஷ்டங்களையுந் துன்பங்களையும் மன முதலான அந்தக் கரண விருத்தியினுலும் கண் முதலான இந்திரியங்களாலும் மிகவும் அறிந்து கொள்கின்ற ஆன்ம அறிவு ஒத்திருத்தலாலும் மனிதர்களுக்கு ஊழ்வகையினுல் அருள் நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டில் ஜீவித்துத் தேகத்தை வைத்திருக்கக் கூடாமையாலும், தங்கள் முயற்சியாலும், அறிவாலும், சுதந்திரத்தாலும் சம்பாதிக்கின்ற ஆகாமிய ஆகாரத்தாலும், பசி நீங்கித் தேகத்தை வைத்திருக்க வேண்டுமாதலாலுமே, ஆகாயத்தில் சம்பாதிக்கின்ற ஜீவ சுதந்திரம் மனிதர்களுக்கு அரு

ளால் மிகவுங் கொடுக்கப்பட்டபடியாலும் ஊழ் வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும் படியாகவும், அந்தப் பசியை நீக்கு நிமித்தம் ஒருவரையொருவர் எதிர்பார்க்கும்படியாகவும், அவர் தயவினுல் ஆகாரங்கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன் முயற்சியிற் செலுத்தவும், ஆகாரங் கொடுத்தவர் சித்தி முத்திகளை யடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்டபடியாலும்;

மனித தேகம் மற்ற ஜீவதேகம்போல இலேசிலே எடுக்கக்கூடாததாலும், 1. மனித தேகத்தில் ஆன்ம விளக்கமும், அருள் விளக்கமும், மிகவும் விளங்குதலாலும், 2. இந்த மனித தேகம் போனுல் மீளவும் இந்தத் தேகம் வருமென்கிற நிச்சயமில்லாமையாலும், 3. இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும், 4. இந்த மனித தேக மாத்திரமே முதற் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதித்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவுடைய தேகமாதலாலும், 5. மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற ஜீவகாருண்ய விதியைப் பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்க வேண்டுமென்றும் கடவுள் விதித்திருக்கின்றபடியால் பசியை ஆகாரத்தினுல் நிவர்த்தி செய்விக்கின்ற ஜீவகாருண்ய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டுமென்று அறிய வேண்டும்.

22. ஊழ்வகைக்குத் தக்கபடி, மிருகம், பறவை முதலிய ஜீவர்களுக்கு, அருளால் நியதி ஆகார மாத்திரம் இருக்க மனிதர்களுக்கு மாத்திரம் • ஊழ் நியதி ஆகாரத்தோடு

ஆகாமிய முயற்சி ஆகாரமும் வேண்டுவது அவசியமென்றது எப்படி? என்னில்:—

மனிதர்கள் பிராரத்தப்படி நியதியாகாரத்தைப் புசித்துப் பிரார்த்த அனுபவத்தை நீக்கிக் கொண்டு ஆகாமியத்தால் முயற்சியாகாரத்தைப் புசித்துக் கரணேந்திரிய தேகத்தை வலுவுள்ளதாகச் செய்துகொண்டு, சன்மார்க்க சாதனத்தை அனுசரித்துச் சித்தி முத்தி இன்பங்களைப் பெறக் கடவரென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால், மனிதர்களுக்குப் பிரார்த்த ஆகாரமும் ஆகாமிய முயற்சி ஆகாரமும் அவசியம் வேண்டுமென்று அறிய வேண்டும். மிருகம், பட்சி, ஊர்வன, தாவரம் என்கிற ஜீவ தேகங்கள் தண்டனை நிமித்தம் விதித்த தேகங்களாதலால், பிரார்த்த ஆகாரம் கடவுள் விதித்தவண்ணம், அருட்சத்தியால் தடைபடாமல் கொடுக்கப்படுமாகலில் ஆகாமிய ஆகாரம் சம்பாதிக்க வேண்டாமென்றறிய வேண்டும்.

23. ஆனால் ஜீவகாருண்யம் எல்லா ஜீவர்களுக்கும் பொதுவென்று முதலில் குறிக்கப்பட்டது என்னை? எனில்:—

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்து ஆகாரத்தினால் திருப்தி இன்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும், 1. பசியைப்போல் வேறு வகையினால் ஜீவகொலை நேரிடுவதானால் அந்த ஜீவகொலையைத் தம்மாற் கூடியவரையில் எவ்விதத்திலாயினும் தடைசெய்து உயிர் பெறுவித்துச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்றும், 2. பிணி, பயம் முதலிய மற்ற ஏதுக்

களால் ஜீவர்களுக்குத் துன்பம், நேரிடில் அத் துன்பங்கள் தங்களால் நீக்கத் தக்கவைகளாகில் நீக்க வேண்டுமென்றும், 3. மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் முதலிய ஜீவர்களிடத்துப் பயத்தினால் வருந்துன்பத்தையும், கொலையினால் வருந் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், 4. அவற்றுள் துட்ட ஜீவர்களிடத்தும் சிறிது பயத்தினால் வருந்துன்ப மாத்திரமே யல்லாது கொலையினால் வரும் துன்பங்களைச் செய்யப்படாதென்றும், 5. இவ்வகை முழுதும் ஜீவகாருண்யமேயாதலால் எல்லா உயிர்களிடத்தும் ஜீவகாருண்யம் வேண்டுமென்று கடவுளால் ஆணை செய்ததென்றறிய வேண்டும்.

24. மனிதர்கள், தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில் சில உயிர்களில் தாமச ஆகாரமாகிய மாமிச ஆகாரஞ் செய்வதனால் அவைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அந்த ஆகாரத்தைக் கொடுத்து ஆற்றுவிக்கப்படாதோ? என்னில்:—

ஒரு ஜீவனைக் கொன்று ஒரு ஜீவகனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருண்ய ஒழுக்கமே யல்லவென்றும்-கடவுள் சம்மதமும் அல்லவென்றும் இவைகட்கு முழு விரோதமென்றும்—அறிய வேண்டும்.

எல்லா ஜீவர்களும் இயற்கையுண்மை ஏகதேசங்களாகிக் கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றபடியாலும் 1. கடவுள் இயற்கை விளக்கம் மறைபடும்போது ஜீவத்தன்மை

இல்லாதபடியாலும், 2. கடவுளியற்கை விளக்கமும் ஜீவனியற்கை விளக்கமும், ஒன்றோடொன்று மாறு படாததாலும், 3. கடவுளியற்கை விளக்கமும் ஜீவன் இயற்கை விளக்கமும் அந்தந்தத் தேகங் களினும் விளங்குகின்றபடியாலும், 4. ஒரு ஜீவனை வதைத்து அதனால் மற்றொரு ஜீவனுக்குப் பசியாற் றுதல் ஜீவகாருண்யவொழுக்கத்திற்கு முழு விரோத மென்றே அறிய வேண்டும்.

25. புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு ஜீவனைக் கொன்று தின்று தாமிச ஆகாரத் தால் பசியாற்றித் திருப்தியின்பத்தை யடைந்து சந்தோஷிக்கின்றன. அந்தச் சந்தோஷம் கடவுளியற்கை விளக்க ஏக தேசமும் ஜீவன் இயற்கை விளக்க நிறைவும் எனவுங் கொள்ளக் கூடாதோ? என்னில்:—

கூடாது. தாமச ஆகாரத்தால் பூரண சத்துவ மாகிய கடவுளியற்கை விளக்க ஏகதேசமும், ஏகதேச சத்துவமாகிய ஆன்ம இயற்கை விளக்கமும் விளங்கா இருளால் ஒளி விளங்காததுபோல்.

26. இதைத் தாமச ஆகாரமென்பது என்னை? என்னில்:—

கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்ம விளக்கத்தை மறைத்த இம்சை ஆகாரமாதலால் தாமச ஆகாரமாயிற்று.

27. இந்த ஆகாரத்தால் வந்த திருப்தியின்ப மாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்கம்? என்னில்;—

அனுதி பசுகரண மாயா விளக்கம் என்று அறிய வேண்டும்.

28. பசு என்பது என்னை?

ஆணவம், மாயை, கன்மம் என்கிற மும்மல பந்தத்தால் ஒன்றுபட்டு அறிவிழந்த ஆன்மாவையே பசுவென்பது.

29. அப்பசுவிற்கு விளக்கந் தோன்றுவது எப்படி? என்னில்:—

சூரியனை மறைத்த மேகவண்ணத்திலுள்ள இருளினிடத்தும் சூரியப் பிரகாச விசேஷந் தோன்றுதலால், அவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அதுபோல் அசுத்த மாயாகரணங்களுந் தாமச குணமும் இருள் வண்ணமுடையவாயினும், தம்மால் மறைக்கப்பட்ட பரஜீவ விளக்க விசேஷத்தால் அசுத்த மாயாகரணமும், தாமச குணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனுல் தாமச ஆகாரத்தில் வரும் விளக்கம் அசுத்த மாயாகரண விளக்கமே யென்று அறிய வேண்டும். (தாவரங்களும் உயிர்கள் தான்.)

30. ஆனுல், மரம், புல், நெல் முதலான தாவரங்களும் உயிராகவே சொல்லப்படுகின்றனவே, அவைகளை இம்சை செய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாமச ஆகாரமல்லவோ? அதனுல் வந்த சந்தோஷம் அசுத்த மனோகரண சந்தோஷமல்லவோ? என்னில்:—

மரம், புல், நெல் முதலான தாவரங்களும் உயிர்கள்தான். அவைகளை இம்சை செய்து ஆகாரங் கொண்டால் அது ஏகதேச தாமச ஆதாரந்தான்

அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்த கரண சந்தோஷந்தான், ஆனாலும் அப்படியல்ல.

மரம், புல், நெல் முதலான ஜீவர்கள் பரிச மென்கின்ற ஓரறிவையுடைய ஜீவர்களாதலாலும் 1. அவ்வுடம்பில் ஜீவவிளக்கம் ஒரு சார் விளங்குதலாலும், 2 அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும் மற்ற வித்துக்கள்போல் சடமாதலாலும் 3. அவ் வித்துக்களை நாமே விதைத்து உயிர்விளைவு செய்யக் கூடுமாதலாலும், 4. அவ்வுயிர்களை வேறு செய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாமல், உயிர் தோன்றற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும், காய்களையும், கனிகளையும், பூக்களையும், கிழங்குகளையும், தழைகளையும், ஆகாரங் களாகக் கொள்வதேயன்றி அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும், 5. அவை களில் வித்து, காய், கனி முதலானவை கொள்ளும் போது சுக்கிலம், நகம், ரோமம் முதலியவைகளை வாங்கும்போது இம்சை உண்டாகாமைபோல் இம்சை உண்டாகதபடியாலும், 6. தாவரவர்க்கங் களுக்கு மன முதலான அந்தக் கரணங்கள் விருத்தியில்லாதபடியாலும், 7. அது உயிர்க் கொலையுமல்ல. துன்பம் உண்டுபண்ணுவது மல்ல. அதனால் அது ஜீவகாருண்ய விரோதமாகாது. அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் ஜீவவிளக்க சகிதமான கடவுள் விளக்கமேயாகுமென்று அறிய வேண்டும்.

31. மரம் முதலிய தாவரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரேறுதற்கிடமாகிய சடங்களென்பது எப்படி? என்னில்:—

1. வித்துக்களில் ஜீவனிருந்தால் நிலத்தில் விதையா முன்னமே விளைய வேண்டும். நிலத்தில் விதைத்த காலத்தும் சில வித்துக்கள் விளையாமலே யிருக்கின்றன. 2. அன்றியும் வித்தென்பது காரணம். இந்தக் காரணம்—உடம்பு தோன்று தற்கேயென்று சிறு பிள்ளைகளாலும் அறியப்படும். அன்றி உயிர்—நித்தியம் உடம்பு—அநித்தியம்; நித்தியமான உயிர் காரணம் வேண்டாது. அநித் தியமாகிய உடம்பே—காரணம் வேண்டும். ஆகலில் வித்துக்களைச் சடமென்று அறிய வேண்டும்.

32. ஆனால் வித்துக்களினிடத்து ஆன் மாக்கள் ஏறுவது எப்படி? என்னில்:-

நிலத்திற் கலந்த வித்திற்கு நீர் விடில் அந்த நீரின் வழியாகக் கடவுள் அருள் நியதியின்படி ஆன் மாக்கள் அணுத்தேகத்தோடு கூடி நிலத்திற் சென்று அந்நிலத்தின் பக்குவ சக்தியோடு கலந்து வித்துக் களினிடமாகச் செல்கின்றன வென்று அறிய வேண்டும்.

33. முளைகளையே பிடுங்கப்படா தென்று சிலர் சொல்லுகின்றார்கள். வித்து காய் இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல் வது எப்படி? என்னில்.

வித்து நிலத்திற் படிந்தபின் நீர்வழியாக ஆன்மாவானது சென்று பக்குவசத்தியிற் கலந்து வித்திலேறி முளைத்தபடியால், முளையானது வித்து, காய், முதலியவைகளைப் போலச்சடமல்ல. ஆகலால், முளைகளைப் பிடுங்கப்படாதென்பது உண்மை யென்றறிய வேண்டும்.

(தாவர ஆகாரம்)

34. வித்து, காய், கனி முதலியவற்றில் உயிர்க் கொலையில்லா விடினும், நகம் ரோமம், சுக்கிலம் முதயவற்றிலிருக்கிற அசுத்த மாவதில்லையோ? என்னில்:-

தத்துவ விருத்தியும், தாதுவிருத்தியும். இல்லாத படியால் அசுத்தமுமில்லை.

ஆகலில் மரம் புல் நெல் முதலியவைகளின் வித்து, காய், கனி, தழை முதலியவற்றைப் புசிப்பது ஜீவகாருண்ய விரோத மல்ல வென்றறிய வேண்டும்

(மாமிச ஆகாரம் நியதியல்ல)

35. மாமிச ஆகாரம்—புலி முதலாகிய துட்ட மிருகங்களுக்கு நியதியாகார மல்லவோ? என்றறிய வேண்டில்:-

அது அவ்வுயிர்களுக்குச் சிருஷ்டி நியதி ஆகார மல்ல. பரம்பரை வழக்கத்தாற் பெற்ற ஆகார மென்றறிய வேண்டும். ஆகலில் அதை நிவர்த்தி செய்வித்துச் சத்துவ ஆகாரங்களைப் புசிப்பிக்கும்படி செய்யவுங்கூடும். ஒரு சீல முடையவன் கிரகத்தில் வழங்குகின்ற பூனைக்கும், நாய்க்கும் வேறிடங்களிற் போய் அசுத்த ஆகாரங் கொள்ளாமல் காவல் செய்து அடிநாள் தொடங்கிச் சுத்த ஆகார வழக்கமே செய்விக்கின்றான். அவைகள்—அவைகளைப் புசித்து உயிர் வழங்கி வருகின்றன. அப்படியே புலி சிங்கம் முதலிய துட்ட வர்க்கங்களையும், மேல் நின்று சுத்த ஆகாரத்தில் பழக்குவாரில்லாமையால் அசுத்த ஆகாரங்களைப் பழக்கத்தாற் புசிக்கின்றன வென்று அறியலாம்.

ஆகலில் ஒரு ஜீவனைக் கொன்று மற்றொரு ஜீவனுக்குப் பசியாற்றுவித்தல் கடவுளருளுக்குச் சம்மதமுமல்ல ஜீவகாருண்ய ஒழுக்கமும் அல்ல வென்று சத்தியமாக அறியவேண்டும்.

(இந்த ஜீவகாருண்ய மென்கின்ற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம் அபர இன்பமென்றும், பரஇன்ப மென்றும் இருவகைப்படும்.)

(அபர இன்பம்)

இச்சை முதலியவைகளைப்பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் அபர இன்பமாகும். அவை இம்மையில் அனுபவிக்கின்ற இன்பங்களில் சில வென்றறிய வேண்டும்.

36. அவை எவை? என்னில்:—

1. உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும் 2. இருப்பதற்கு இடமில்லாமலும்—3. உழுவதற்கு நிலமில்லாமலும் 4. பொருந்துவதற்கு மனைவியில்லாமலும். 5. விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகளில்லாமலும்—துன்பப்படுகின்ற ஜீவர்கள் விஷயத்தில் ஜீகவாகாருண்யந் தோன்றி உடுப்பதற்கு வஸ்திரம், இருப்பதற்கு இடம், உழுவதற்கு நிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்தபோது, பெற்றுக் கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்ப விளக்கமும், அந்த இன்பத்தைக் கண்டு கொடுத்தவர்களுக்கு உண்டாகின்ற இன்ப விளக்கமும் கடவுள் கரணத்தில் ஏகதேசமும்—ஜீவகரணத்திற் பூரணமாகத் தோன்றுகின்றவையாகலால் அது அபர இன்ப மென்று அறிய வேண்டும்.

(பர இன்பம்)

பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் பரஇன்பமாகும். அவை இம்மையில் போக சித்திகளாலும்—யோகசித்திகளாலும்—ஞானசித்திகளாலும் வருகின்ற இன்பங்களும்—முடிவில் அனுபவிக்கப்படும் மோட்ச இன்பமும் ஆகுமென்றறிய வேண்டும். உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த ஜீவர்களுக்கு ஜீவகாருண்யத்தால் ஆகாரங் கொடுக்க உண்டு பசி நீங்கிய தருணத்தில் அந்த ஜீவர்களுக்கு அகத்தினிடத்தும், முகத்தினிடத்தும் தழைத்து பொங்கித் ததும்புகின்ற இன்பமும் அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலும் அவ்வாறுண்டாகின்ற இன்பமும்—ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்திற் பூரணமாகித் தோன்றுகின்றவையாகலால்—பர இன்பமென்று அறிய வேண்டும்.

வஸ்திரம், இடம், நிலம், பெண், பொருள் முதலானவைகளில்லாமல் துன்பப்படுகின்றவர்கள், அத்துன்பங்களை மனவெழுச்சியால் சகித்துக் கொண்டு உயிர்திரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக்கூடும்—பசியினால் துன்பம் நேரிட்ட போது மனவெழுச்சியால் அத்துன்பத்தைச் சகித்துக் கொள்ளக்கூடாது. சகிக்கத் தொடங்கில் உயிரிழந்து விடுவார்கள்.

(பசியின் சகியாமை)

பசி நேரிட்டபோது-பெற்றவர்கள் பிள்ளைகளை விற்றும், பிள்ளைகள் பெற்றவர்களை விற்றும்-மனைவியைப் புருடன் விற்றும்-புருடனை மனைவி விற்றும் அந்

தப் பசியினுல் வரும் துன்பத்தை மாற்றிக்கொள்ள துணிவார்களென்ருல், அன்னியமாகிய வீடு, மாடு, நிலம், உடைமை முதலியவைகளை விற்று பசியை நீக்கிக் கொள்வார்களென்பது சொல்லவேண்டு வதில்லை. உலகம் முழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தி யாக அரசனும்-பசி நேரிட்டபோது, தனது அதிகார வுயர்ச்சி முழுதும்விட்டுத் தாழ்ந்த வார்த்தைகளால் 'பசி நேரிட்டது, என்ன செய்வது' என்று அருகிலிருக் கின்ற அமைச்சர்களிடத்துக் குறை சொல்லுகிருன். பகைவரால் எறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்தை யும் கையாற் பிடித்துக் கொண்டு எதிரிட்ட பகை வரை யெல்லாம் அஞ்சாது ஒருநிமிஷத்தில் வெல்லத் தக்க சுத்த வீரரும் பசி நேரிட்டபோது செளகரியத் தையிழந்து பசிக்கஞ்சிப் பக்கத்தில் நிற்கின்ற வரைப் பார்த்து இளைப்பு வருமே! சண்டை எப்படிச் செய் வது!' என்று முறையிடுகின்ருர்கள். இவ்வுலக போகங்களோடு இந்திரபோக முதலிய போகங்களை யும், துரும்பாக வெறுத்து முற்றுந்துறந்து அறிவை யறிந்து அனுபவம் விளங்கிய ஞானிகளும்-இந்திரியங் களை அடக்கி மனேலயஞ் செய்து உண்மை நிட்டை யிலிருக்கின்ற யோகிகளும்-இறந்தோரையும் எழுப் பத்தக்க அளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர் களும், முனிவர்களும் தபசிகளும் பசி நேரிட்ட போது தங்கள் தங்கள் அனுபவ லட்சியங்களைவிட்டு அடுத்த ஊரைநோக்கிப் பலிக்கு வருகின்ருர்கள். பலி நேராதபோது நிலை கலங்குகிருர்கள். சொற்பனத் தில் ஓர் இழிவுவரினும் அதுகுறித்து உயிர்விடத்தக்க மானிகளும்-பசி நேரிட்டபோது சொல்லத் தகாத வரிடத்துஞ் சொல்லி மானங்குலைகின்ருர்கள். சாதி

சமய ஆசாரங்களில் அழுத்தமுடைய ஆசாரியர்களும் பசி வந்தபோது-ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர்பார்க்கின்றார்கள். கல்வி கேள்விகளில் நிரம்பி அறிதற்கரிய நுட்பங்களையறிந்து, செய்தற்கரிய செய்கைகளைச் செய்துமுடிக்க வல்லவர்களும்-பசி நேரிட்டபோது அறிவுங் கருத்தும் அழிந்து தடுமாறுகின்றார்கள். இராப்பகல் தோன்றாது புணர்ச்சியின்பத்திற் பொங்குகின்ற காமிகளும்-பசி நேரிட்டபோது புணர்ச்சியை மறந்து காமத்தை கசந்து கலங்குகின்றார்கள். நாமே பெரியர் நமக்குமேற் பெரியரில்லையென்று இறுமாப்படைகின்ற அகங்காரிகளும் பசி நேரிட்டபோது அகங்காரங் குலைந்து ஆகாரம் கொடுப்பவரை பெரியவராகப் புகழ்கின்றார்கள். ஒரு வகைக் காரியங்களில் அனேக வகைகளாக உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும்—பசி நேரிட்டபோது, டம்பத்தை இழந்து மயங்குகின்றார்கள். இவரிவர் இப்படி இப்படியானால்—ஒருவகை ஆதாரமுமில்லாத ஏழைகள்-பசி நேரிட்டபோது என்னபாடுபடார்கள்! அந்தக்காலத்தில் அந்த ஏழைகளுக்கு ஆகாரங்கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும்! அந்தச் சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப்பட்ட லாபங்கிடைக்கும்! இப்படிப்பட்டதென்று சொல்வதற்கும் அருமை என்றறிய வேண்டும்.

(பசியின் அவஸ்தை)

ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில்-ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது-அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது.-அது மறையவே புருடதத்துவம் சோர்ந்துவிடுகின்றது. அது சோரவே பிரகிருதிதத்துவம்

மழுங்குகின்றது. அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன. மனம் தடுமாறிச் சிதறுகின்றது. பூ த ங் க ளெ ல் ல ா ம் புழுங்குகின்றன-வாதபித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன-கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது-காது கும்மென்று செவிடு படுகின்றது. நா உலர்ந்து வரளுகின்றது. நாசி குழைந்து அழல்கின்றது-தோல்மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது-கைகால் சோர்ந்து துவளுகின்றன-வாக்குத் தொனிமாறிக் குளருகின்றது-நரம்புகள் குழைந்து நைகின்றன-நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன-இருதயம் வேகின்றது-மூளை சுருங்குகின்றது-சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது. ஈரல் கரைகின்றது. இரத்தமும் சலமும் சுவறுகின்றன. மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது. வயிறு பகீலென்றெரிகின்றது. தாபசோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன. உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் தோன்றுகின்றன. பசியினால் இவ்வளவு அவத்தைகளுந் தோன்றுவது ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றது.

இவ்வளவு அவத்தைகளும்-ஆகாரம் கிடைத்த போது உண்டு பசி நீங்க-நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து உள்ளங் குளிர்ந்து அறிவு வியங்கி; அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும் கடவுள் களையுந்துளும்பி ஒப்பில்லாத திருப்தி இன்பம் உண்டாகின்றது.

இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்? இந்தப் புண்ணியத்தைச்

செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்சமென்றே சத்தியமாக அறிய வேண்டும்.

இதனால் - நரகவேதனை - சன்னவேதனை - மரண வேதனை, என்கின்ற மூன்று வேதனைகளுங்கூடி முடிந்த வேதனையே பசிவேதனை யென்றும் - அகம், புறம், நடு, கீழ், மேல்பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து - எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷ இன்பமே ஆகாரத்தினால் உண்டாகும் திருப்தி இன்பம் என்றும் அறியப்படும்.

(பசி என்பது ஓர் உபகாரக் கருவி)

பசியில்லாவிடில் ஜீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரை யொருவர் எதிர்பார்க்க மாட்டார்கள். எதிர்பாராத பக்ஷத்தில் உபகாரச் செய்கை தோன்றாது. அது தோன்றாதபோது ஜீவகாருண்யம் விளங்காது; அது விளங்காதபோது கடவுளருள் கிடைக்கமாட்டாது. ஆதலால், பசியுங் கடவுளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவி என்றே அறிய வேண்டும்.

பசியினால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்டகாலத்தில் அடைகின்ற சந்தோஷமும் தாய், பிதா, பெண்டு, பிள்ளை காணி, பூமி, பொன், மணி முதலானவைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களாயின் ஆகாரம் உண்டகாலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக இருக்கும்! ஆதலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களும் கடவுளருளின் ஏகதேச சொரூப ரூப சுபாவங்களாகவே அறிய வேண்டும்.

## ஜீவகாருண்யம்

1. பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றது—ஜீவகாருண்யம்.

2. பசியென்ற விஷக்காற்ருனது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே—ஜீவகாருண்யம்.

3. கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய ஜீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினுல் பாழாகுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே —ஜீவகாருண்யம்

4. கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற ஜீவரது தத்துவக் குடும்ப முழுதும் பசியினுல் நிலை தடுமாறி அழியுந்தருணத்தில் ஆகாரங்கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே—ஜீவகாருண்யம்.

5. பசியென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே—ஜீவகாருண்யம்.

6. பசியென்கிற விஷம் தலைக்கேறி ஜீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே—ஜீவகாருண்யம்.

7. பசியென்கிற கொடுமையாகிய தேள் வயிற் றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப் பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆதாரத் தால் அக்கடுப்பை மாற்றி கலக்கத்தைத் தீர்ப்பதே—ஜீவகாருண்யம்.

8. நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப் பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாபி இன்றும் வருமே!—இதற்கென்ன செய்வோம் என்று ஏக்கங் கொள்கின்ற ஏழை ஜீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் —ஜீவகாருண்யம்.

9. 'வெயிலேறிப் போகின்றதே!' இனிப் பசி யென்கின்ற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது! என்று தேனில் விழுந்த ஈயைப்போல், திகைக்கின்ற ஏழை ஜீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான்-ஜீவகாருண்யம்.

10. 'இருட்டிப் போகின்றதே இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்!'—யாரைக் கேட்போம்—என்ன செய்வோம்—என்ற விசாரத்தில் அழுந்திய ஏழை ஜீவர்களது விசாரத்தை மாற்றுவதே—ஜீவகாருண்யம்.

11. நடந்து, நடந்து காலுஞ் சோர்ந்து— கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது— நினைந்து நினைந்து மனமும் சோர்ந்தது— இனி இப் பாவி வயிற்றுக்கென்ன செய் வோம்!—என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண் ணீரை மாற்றுவதே—ஜீவகாருண்யம்,

12. 'பகற்போதும் போய்விட்டது—பசியும் வருத்துகின்றது—வேறிடங்களிற் போக வெட்கம் தடுக்கின்றது—வாய் திறந்து கேட்க மனம் வலிக்கின்றது—வயிறு எரிகின்றது—உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை—இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!—என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கும் நாவெழாமல், உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப்போல் மனமறுகுகின்ற மானிகளாகிய ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பாற்றுவதே—ஜீவகாருண்யம்.

13. நாம் முன்பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால் இப்பிறப்பில் நமது பசிக் குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வர்—அப்போது அப்படி நாம் செய்ததில்லை இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை—என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழை ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே—ஜீவகாருண்யம்.

14. தேக முழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சி மூடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து, நினைத்து—தெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவார் போல—அடிவயிற்றிற்

கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே—ஜீவகாருண்யம்.

15. நேற்றுப் பட்டினி கிடந்ததுபோல இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? நாம் பாலிய வசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும், பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல. வார்த்திப திசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்துவிடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்?—என்று எண்ணி எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப் போல், பசி நெருப்பும்—பயநெருப்பும்—விசார நெருப்பும்—உள்ளே மூண்டபடியிருக்க கன்னப்புடையில் கைகளை வைத்துக்கொண்டு நீர் கலங்க வருந்துகின்ற கண்களில் ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே—ஜீவகாருண்யம்.

16. கண், கை, கால் முதலிய உறுப்புக்களில் குறைவில்லாதவர்களா ் ஆகாரம் சம்பாதிக்க சக்தி யுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கிறார்கள்—குருடும், செவிடும், ஊமையும், முடமுமாகவிருக்கின்ற

நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும்! பசி எப்படி நீங்கும் என்றுதனித் தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே—ஜீவகாருண்யம்.

17. பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும்—எந்தச் சமயத்தாராயினும்—எந்த ஜாதியாராயினும்—எந்தச் செய்கையாராயினும்—அவர்கள் தேச வொழுக்கம் சமய வொழுக்கம், ஜாதி யொழுக்கம், செய்கை யொழுக்கம் முதலானவைகளைப் போதித்து விசாரியாமல்—எல்லா ஜீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே—ஜீவகாருண்யம்.

18. சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்துக் கொள்ளத் தக்க மிருகம், பறவை, ஊர்வன தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது பசி நிவர்த்தி செய்விப்பதே—ஜீவகாருண்யம்.

19. பசியை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க புவன போக சுதந்திரங்களைப் பெறுதற்குரிய அறிவு இருந்தும்—பூர்வ கர்மத்தாலும்—அஜாக்ரதையாலும்—அச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பசியி

ளுல் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்த பசி வருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய "ஜீவகாருண்யம் என்கின்ற திறவு கோலை"க் கொண்டுதான் மோட்ச மாகிய மேல் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும். ஆகலின், ஜீவகாருண்யமென் கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் கால முள்ளபோதே சம்பாதித்துக்கொண்ட சமு சாரிகள்—சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற சாதன சகாயங்களை வேண்டாமல் எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து, அவ்வீட்டுக் கத வைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

20. 1. புண்ணியபூமிகளை வலஞ்செய்தல். 2 புண் ணிய தீர்த்தங்களிலாடல். 3. புண்ணிய தலங்களில் வசித்தல். 4. புண்ணிய மூர்த்தி களைத் தரிசித்தல். 5. தோத்திரஞ் செய்தல். 6. ஜெபஞ் செய்தல். 7. விரதஞ் செய்தல் 8. யாகஞ் செய்தல். 9. பூஜை செய்தல் முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளுப்—பக்தர்களும்—இருடிகளும் உணவை நீக்கி, உறக்கத்தை விட்டு விடயச் சார்புகளைத், துறந்து—இந்திரியங்களை அடக்கி—மனோலயஞ் செய்து—யோகத்தி லிருக்கின்ற யோகிகளும்—அளவிறந்த

சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும்—நித்தியா நித்தியங்களை அறிந்து எல்லாப் பற்றுக்களையும் துறந்து பிரமானுபவத்தைப் பெற்ற ஞானிகளும்—ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால் மோட்ச மென்கின்ற மேல்வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்திற் காத்திருந்து மீளவும் அத்திறவு கோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லது, கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழமாட்டார்களென்று உண்மையாக அறிய வேண்டும்.

21. இதனால் அறிவு விளங்கிய ஜீவர்களுக்கெல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடென்றும் அறியப்படும். அன்றியும் ஜீவகாருண்யவொழுக்கத்தை உடையவர்களாகி அருந்தல், பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை அனுபவிக்கின்ற சமுசாரிகளெல்லாம் சர்வ சக்தியையுடைய கடவுளருக்கு முழுதும் பாத்திரமாவார்கள்.

ஜீவகாருண்ய வொழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்களும் கடவுளருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. ஜீவகாருண்யமில்லாது செய்யப்படுகிற செய்கைகளையெல்லாம் பிரயோசனமில்லாத மாயா ஜாலச் செய்கைகளே யாகுமென்று அறிய வேண்டும்.

எல்லா ஜீவர்களும் கடவுள் இயற்கையுண்மை ஏகதேசங்களாதலாலும் அவரவர் இடங்களிற் கடவுள் அருள் விளக்கம் விளங்குதலாலும், 1. சமுசாரிகளுள் தமது தாய் தந்தை புணர்ந்தோர், மக்கள், துணைவர் முதலிய குடும்பமட்டிற் பசியாற்றிக் கொள்ளத் தக்க அற்ப சக்தியுள்ள சமுசாரிகள், தாய், பிதா, மக்கள், துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினுற் பரதவிக்கவிட்டு அயலார்க்கு பசியாற்றத் தொடங்குதலும், 2. தம்மிடத்துப் பசித்து வந்த அயலாரை—அந்தப் பசியால் பரதவிக்கவிட்டுத் தம் குடும்பத்தார் பசியை ஆற்றத் தொடங்குதலும்—கடவுளருளுக்குச் சம்மதமல்ல.

ஆதலால் தமது குடும்பச் செலவைக் கூடிய மட்டில் சிக்கனஞ்செய்து இருதிறத்தார் பசியையும் நீக்குதல் வேண்டுமென்றும்—அற்ப சக்தியினுள் குறைவுபட்டுத் தமது குடும்பமட்டிலும் பசியாற்றுவிப்பதற்குப் பிரயாசையால் மிகச் சிறிய முயற்சியுடைய சமுசாரிகள் தமது குடும்பமட்டிலாவது பசியாற்றுவித்துக் கொண்டு தம்மிடத்துப் பசித்து வந்த அயலார் விஷயத்தில் மிகவும் தயவுடையவர்களாகி அவர் பசியை மற்றொருவரைக் கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்க முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும்—இயல்புள்ள பிரபல சமுசாரிகள், தங்கள், தங்கள் வருவாய்க்குத் தக்க வரையில் தாய், பிதா, புணர்ந்தோர், மக்கள், துணைவர், உறவினர், சிநேகர், அதிதிகள், பெரியர், அடிமைகள், அயலார், பகைவர் முதலியவர்களுக்கும் தமது குடும்பத்திற்கு சகாயமாகத் தேடிய

பசு, எருது, எருமை, ஆடு, குதிரை முதலிய பிராணிகளுக்கும், பசியை ஆற்றுவித்துத் திருப்தி யின்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும்— விவாகம், புத்திரப்பேறு தெய்வம் படைத்தல் முதலிய பலவகைச் செய்கைகளில் வேறு வேறு சடங்குகளும் வேறு வேறு பெருமைப்பாடுகளும் குறித்துப் பொருட்செலவு செய்தலை அமைத்து— விவாக முதலிய அந்தந்தச் செய்கைகளிலும் பசித்த ஜீவர்களுக்குப் பசியை ஆற்றுவித்து இன்பத்தை யுண்டுபண்ணுகின்ற சிறப்பினையே செய்ய வேண்டு மென்றும்—அப்படிச் செய்யில் பசித்தவர் பசி நீங்கி அடைந்த இன்பத்திலும் அநேக மடங்கு அதிகமான இன்பத்தைத் தாம் அடைவார்களென்றும் சத்திய மாக அறிய வேண்டும்.

சமுசாரிகள் விவாக முதலிய விசேஷ காரியங் களில் பந்தலை அலங்கரித்தும் அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும்—ஆடல், பாடல் வரிசை, ஊர்வலம் முதலிய விநோதங்களையும் அப்ப வர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடு களையும் நடத்தியும், எக்களிப்பில் அழுந்தியிருக்குந் தருணத்தில் பசித்த ஏழைகள் முகத்தைப் பார்க் கவும் சம்மதிக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தோஷ காலத்தில் தமக்காயினும் தமது மக்கள் துணைவர் முதலியோர்க்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடு கின்றது. அப்போது அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப்படுகிறார்கள். இப்படித் துக்கப்படும் போது—அலங்காரஞ் செய்த பந்தலும்—சங்கல்ப விகல்பமான சடங்குகளும்—ஆடல்பாடல் வாத்தியம் வரிசை ஊர்கோலம் முதலிய விநோதங்களும் அப்ப

வர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளும்—அந்த ஆபத்தைத் தடை செய்யக் கண்டதில்லை. அந்தச் சுபகாரியத்தில் உள்ளபடியே பசித்த ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியை நீக்கி அவர்கள் அகத்திலும், முகத்திலும், கடவுள் விளக்கத்தையும், கடவுளின்பத்தையும் வெளிப்படச் செய்திருந்தார்களானால்—அந்த விளக்கமும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தை நீக்கி விளக்கத்தையும், இன்பத்தையும் சத்தியமாக உண்டுபண்ணுமல்லவா? ஆதலில் விவாக முதலிய விசேஷச் செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களது பசியை ஆற்றுவித்துத் திருப்தியின்பத்தை உண்டுபண்ணுவது முக்கியமென்றறிய வேண்டும்.

1. சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரித்தார்களானால்—அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்தி செய்து, விசேஷ சௌக்கியத்தை உண்டுபண்ணுமென்பது உண்மை.

2. பலநாள் சந்ததியில்லாமல் பலபல விரதங்களைச் செய்து வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால்—அந்த ஜீவகா

ருண்ய அனுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணுமென்பது உண்மை.

3. அற்ப வயதென்று குறிப்பினுல் அறிந்து கொண்டு இறந்து போவதற்கு அஞ்சி விசாரப்படுகின்ற சமுசாரிகள் — தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களாளுல்—அந்த ஜீவகாருண்ய அனுசரிப்புத் தீர்க்காயுளை உண்டு பண்ணுவது உண்மை.

4. கல்வி அறிவு, செல்வம், போகம் முதலியவைகளைக் குறித்து வருந்துகின்ற சமுசாரிகள்-தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களாளுல்-இந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு கல்வி, அறிவு, செல்வம். போகம் முதலானவைகளை உண்டுபண்ணுமென்பது உண்மை.

5. பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக் கொண்ட ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது-மண்ணும் சூடு செய்யாது. பெருமழை, பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி பெருநெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பம் செய்விக்கமாட்டா. வீடு, சிகை, விஷக்காற்று, விஷசுரம் முதலிய அஜாக்கிரதைப் பிணிகளுமுண்டாகா. அந்த

ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகள் - ஆற்று வெள்ளத்தாலும், கள்ளர்களாலும், விரோதிகளாலும், கலக்கப்படார்கள், அரசர்களாலும், தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள். ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளது விளைநிலத்தில் பிரயாசையில்லாமல் விளைவு மேன்மேலும் உண்டாகும். வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும்-உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும். சுற்றங்களாலும் அடிமைகளாலும் சூழப்படுவார்கள். துஷ்ட தெய்வங்களாலும் பயன் செய்ப்படார்கள்.

ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரதையினாலும் ஊழ்வகையினாலும் சத்தியமாக வராது.

பசித்தவர்களுக்கு பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற ஜீவகாருண்ய ஒழுக்கமாகிய மேலான விரதமானது—தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமுசாரிகள் தபசிகள், சந்நியாசிகள் ஆண் ஜாதியார், பெண் ஜாதியார், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர் தாழ்ந்தோர்முதலிய யாவராலும் அவசியம் செய்யத்தக்கதென்பது கடவுளாணையென்றறிய வேண்டும்.

பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண்சாதி தடுத்தாலும்—பெண்சாதியை புருஷன் தடுத்தாலும் பிள்ளைகளை தந்தை தடுத்தாலும் தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும் சீடரை

ஆசாரியர் தடுத்தாலும் அடியாரை ஆண்டவன் தடுத்தாலும், குடிகளை அரசன் தடுத்தாலும்— அந்தத் தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் *செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத்திற்போகா தென்பதை உண்மையாக நம்பி ஜீவகாருண்ய வொழுக்கத்தை நடத்த வேண்டுமென்றும் அறியவேண்டும்.

உள்ளபடி பசியால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுக்க நினைத்தபோது நினைத்த புண்ணியரது மனம் வேறு பற்றுக்களை விட்டுச் சுத்த கரண மாகிய நினைத்தபடியால், அந்தப் புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறிய வேண்டும். ஆகாரங் கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்றபடியால் ஞானிகளென்றே உண்மையாக அறிய வேண்டும். ஆகாரங் கொடுக்க உண்டு, பசி, தீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும், கீழும், மேலும் நடுவும் பக்கமும் நிறைந்து கரண முதலிய தத்துவங்களெல்லாம் குளிர்வித்துத் தேக முழுதும் சில்லென்று தழைய, முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற, கடவுள் விளக்கத்தையும், திருப்தியின்பமாகிய கடவுள் இன்பத்தையும் பிரத்தியட்சத்தில் தெரிசித்து அனுபவிக்கின்றார்களென்றும், கடவுளின்பத்தை அனுபவிக்கின்ற முத்தரென்று அறிய வேண்டும். பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கின்றார்களாதலால், இவர்களே தெய்வமுமென்று உண்மையாக அறிய வேண்டும்.

ஜீவகாருண்ய வொழுக்கம் உடையவர்களாகி ஜீவர்களைப் பசியென்கின்ற அபாயத்தில் நின்றும் நீங்கச் செய்கின்ற உத்தமர்கள் எந்த ஜதியாராயினும் எந்தச் செய்கையையுடையவர்களாயினும் தேவர், முனிவர், சித்தர் யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையர் ஆவார்களென்று சர்வ சக்தியையுடைய கடவுள் சாட்சியாக சத்தியஞ் செய்யப்படுமென்று அறிய வேண்டும்.

இன்னும் இந்த ஜீவகாருண்ய வொழுக்கத்தின் விரிவைச் சமரச வேதத்திற்கண்டு கொள்ளலாம்.

## ஆன்மிகப் புரட்சியாளர் !

உலகத்தில் இன்று நிம்மதியான வாழ்வு இல்லை. நிலையான வாழ்க்கை இல்லை. மனத்திலே நிம்மதி நிலைப்படும் போதுதான் வாழ்க்கை சலனப்பட்டு அலையாமல் நிலைப்பட்டு நிரந்தரம் பெருகிறது.

நமது நாட்டைப் பொறுத்த மட்டில் பண்டை நாளில் சாந்திமயமான—அமைதி பெற்ற வாழ்வு தான் பேரின்ப வாழ்வு என்று மக்கள் கருதினர்.

மனத்தில் அமைதி நிலவாமல் போவதற்குக் காரணம் என்ன? வாழ்க்கையில் நம்பிக்கையும் பிடிப்பும் தோன்றுமல் போவதுடன் மனத்தில் சதா அச்சம் குடிகொண்டிருக்கும் காரணத்தால்தான் மனத்தில் சஞ்சலம்—அமைதியின்மையும் நிலவுகிறது.

'பயம்—அச்சம்' என்று கூறுகிறேமே, அது என்ன? பிறரால் நமக்கு ஆபத்து வருமோ என்ற அச்சமல்லஅது. நம்மைக்கண்டே நமக்கு ஏற்படுகின்ற

அச்சம் அது. நம்மைக் கண்டு நாம் ஏன் அச்சப்பட வேண்டும்?

நமது வாழ்க்கை என்ருே ஒரு நாள் முடிந்து விடப்போகிறது: என்றைக்காவது ஒரு நாள் நம்மை மரணம் வந்து தழுவிடக்கூடும் என்ற எண்ணந்தான் பெரும்பாலான மனிதர்களின் மனத்தைப் பிடித் தாட்டும்.அச்சம்.

அச்சப்படுவதனுலோ கவலைப்படுவதனுலோ நாம் மரணத்தின் தழுவலிலிருந்து மீண்டுவிட முடியுமா? முடியாது. மனித வாழ்க்கை என்பது ஒரு எல்லைக்குட் பட்ட நாடக வாழ்க்கைதான்.அந்த வாழ்க்கைஎன்ருே ஒரு நாள் முடிவுற்றே தீரும் என்பது நியதி. இந்த நியதியை மாற்றவே முடியாது. எனவே மரண பயத் தால் செயலிழந்து கவலைப்பட்டு என்ன காரணத்துக் காக நாம் பிறப் பெடுத்தோமோ அந்த காரணத்தை மறந்து தடுமாறும்போது தன் மனம் அமைதியிழக் கிறது.

மரணமில்லாப் பெருவாழ்வு வாழ முடியும் என்று அருட்பிரகாச வள்ளலார் நம்பினுர். நம்பிய மகோன்னத நிலையை எய்தவும் செய்தார்.

வள்ளல் பெருமானைப் போன்று அருமுயற்சி செய்யும் வல்லமையைப் பெற்ருல் நாமும் வள்ளல் பெருமானைப் போன்று மரணத்தை வெல்லும் மார்க்கத்தைப் பெறக்கூடும். ஆனுல் மக்கள் ‘ஒவ் வொருவரும் வள்ளல் பெருமாணுக விளங்குவது எளிதன்று. அவர் ஆற்றிய அருஞ்சாதனை அனைவர்க் கும் சுலபமன்று.

மரணமிலாப் பெருவாழ்வு எய்த வள்ளர் பெருமான் கடைப்பிடித்த கடுமையான கடமைகளில் கடுகளவாவது நம்மால் கடைப்பிடிக்கக் கூடுமானுல், மரணமில்லாப் பெருவாழ்வு ஒருபுறம் இருக்கட்டும், பயமற்ற பேரின்ப வாழ்வை நாம் நிச்சயம் பெற முடியும். அதற்கான எத்தனேயோ வழி வகைகளே வள்ளல் பெருமான் நமக்கு வகுத்தருளியிருக்கிருர்.

வள்ளல் பெருமான் தம்முடைய பாடல்களிலே எத்தனேயோ உண்மைகளே நமக்கு உணர்த்துகிருர்.

வெறும் ஆன்மீக நெறி மட்டுமின்றி, அரசியல், அறிவியல், வாழ்க்கை நெறிகள் போன்ற பல்வேறு கருத்துகளே அவருடைய பாடல்களிலே காண முடிகின்றது. ஆனுல் எல்லாக் கருத்துக்களேயும் இறைவனே முன்னிறுத்தித்தான் செப்புகிருர் வள்ளல் பெருமான். இறைவனே நினேந்து கசிந்துருகி, கண்ணீர் மல்கப் பாடும் வேளேயில் இடையிடையே அற்புத உபதேசங்கள் அவரையுமறியாது அவர் பாடல்களிலே இழையோடி காட்சி தருகின்றன.

இறைவனேப் போற்றிப் பிரார்த்தனே செய்யாத தனிப்பாடல்கள் எதனேயும் அவர் இயற்றவில்லே என்பது கண்கூடான உண்மை!

இவ்வாறு இறைவன் சிந்தனேயன்றி வேறு சிந்தனேயின்றி வள்ளலார் வாழ்ந்தது ஏன்?

இறைவனின்றி இவ்வுலகமில்லே—மனிதனில்லே வாழ்க்கையில்லே என்ற உண்மையினே வள்ளல் பெருமான் தெளிவாக உணர்ந்திருந்தார்.

இறைவனின் திருஉருவத்தை சரியாக உணர்ந்து கொள்ள வள்ளல் பெருமான் முயன்றூர். இறைவனின் அருள் நோக்கத்தின் உட்பொருளை உணர்ந்து கொள்ள • அவாவினுர். எல்லாவற்றிற்கு மேலாக இறைவனின் கருணை உள்ளத்தினை முழுமையாகக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டார்.

இறைவனை இனம் கண்டு கொள்ளும் குறுக்கு வழிகளாக வள்ளலார் காலத்தில் மதங்கள் நிலவின. கோயில்கள் காட்சியளித்தன. கடவுள் சிலைகள் மூலைக்கு மூலை அமைந்திருந்தன. மூட நம்பிக்கைகளும், அவற்றின் அடித்தளங்களான கலையுரைத்த கற்பனைகளான புராண இதிகாசங்களும் காட்சி தந்தன.

மேலே கண்ட சாதனங்கள் எல்லாம் மனிதனது அறியாமையைப் பெருக்கி, அவனது கடமையுணர்ச்சியைக் குலைத்து, தெய்வ நம்பிக்கையில் போலித்தனத்தை ஊட்டுவித்து மனித வாழ்க்கையைக் குழப்பி வந்தன என்ற உண்மையினை வள்ளல் பெருமான் கண்டார்—உணர்ந்தார்.

உள்ளபடியே இறைவனை உணர, இறைவன் அருளைப் பெற புதிய புரட்சி வழியொன்று காணத் துடித்து வெற்றியும் கண்டார். எல்லா மதங்களும் உணர்த்தும் உண்மைகளை ஒருமையாகத் திரட்டி, அந்த உண்மையின் உருவமாக புதிய மதம் ஒன்று காண திருவுளம் கொண்டார்.

உத்தரஞான சிதம்பரம் எனப் போற்றப்பட்ட சத்திய ஞான சபையை அமைத்த வள்ளலார், அத்

திருக்கோயிலிலேயே உருவ வழிபாடு முறையை வழக்கத்தில் கொள்ளாமல், புதிய புரட்சி முறை வழிபாட்டு முறையினை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அதனைப்பற்றி ஏற்கனவே சொல்லியுள்ளோம். அதாவது பெரிய நிலைக்கண்ணாடி ஒன்றை அமைத்து, அதன்முன் குத்து விளக்கொன்றை ஏற்றி வைத்து இறைவனை ஜோதி உருவில் வழிபடும் புதிய முறை அது!

இறைவனை வழிபடும் முறையிலும் வள்ளல் பெருமான் புதுமையைப் புகுத்தினார்.

ஆரவாரம் நிறைந்த ஆடம்பர வழிபாட்டை வள்ளல் பெருமான் வெறுத்தார். வீண் ஆரவாரங்கள், மேள, தாள, மணியோசை போன்றவற்றை நீக்கி, மன நெகிழ்ச்சியோடு, ஆண்டவனுடைய தோத்திரங்களை அமைதியாக அன்போடு பாடுவது தான் சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியத்திற்கு முற்றிலும் உடன்பாடு என்பது வள்ளல் பெருமானின் திருவுள்ளமாகும்.

தேங்காய் உடைத்து இறைவனை வழிபடும் முறையையும் வள்ளல் பெருமான் ஏற்றுக்கொள்ளவில்லை. தேங்காய் உடைப்பதில் உற்சாகம் காட்டும் அன்பர்களை நோக்கி வள்ளல் பெருமான்,

"தேங்காய் உடைக்க உங்களுக்கு விருப்பமிருந்தால் அதனை முன்னதாகவே உடைத்து அத்துடன் சர்க்கரை, கற்கண்டு முதலியன கலந்து, ஆண்டவருக்கு இனிப்பாக நைவேத்தியம் வைப்பது நலம்.

ஆண்டவரை வாயார வாழ்த்துவது தவிர, அபி ஷேகம் புட்ப, அலங்காரம், வாகனங்களில் ஏற்றி வீதி உலா வருதல் இன்னும் இதுபோன்ற மற்ற ஆடம்பரங்கள் கூடாது. கடவுளுக்குச் செலவு செய்ய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அப் பணத்தை ஏழைகளின் வயிற்றுப் பெட்டியில் நிரப்புங்கள்'' என்று அடிக்கடி அருளியுள்ளார்.

தெய்வத்தைப்பற்றி வள்ளல் பெருமான் உப தேசித்த கருத்துக்கள், வெறும் பக்தி மார்க்கத்தை உணர்த்துவனவாக மட்டுமின்றி மக்களின் கடமை யுணர்ச்சியினையும், வாழ்க்கை நெறியினையும், உட லோம்புதல் போன்ற விஷயங்களைத் தெளிவாக்குவன வாகவும் அமைந்திருந்தது ஒரு புதுமை. வள்ள லாருக்கு முற்பட்ட ஞானிகளோ வெறும் பக்தி மார்க்கத்தை மட்டுந்தான் மக்களுக்கு உபதேசித்த னர் என்ற உண்மையினை நினைவில் கொண்டால் வள்ளல் பெருமானின் பெருமை விளங்கும்.

இறைவன் அருளைப்பெற மனிதன் செய்ய வேண்டுவதென்ன? என்ற வினாவுக்கு வள்ளல் பெரு மான் அளிக்கும் கீழ்க்கண்ட விடையைக் காணுங்கள்.

''நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடை வதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். இவ்வருள் அன்பினா லல்லாது வேறு வகையில் அடைவது அரிது;....

இ வ் வ ன் பு ஜீவகாருண்யத்தாலல்லாது வேறு வகையில் வராது.

"ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு."

"அன்னிய உயிர்களுக்கு இம்மை உண்டாகாது நடத்தலே ஜீவகாருண்யம். இதுதான் முத்தியடைவதற்கு முதற்படியாயிருக்கிறது...."

பிறிதோறிடத்தில் வள்ளல்பெருமான் பின் கண்டவாறு அருளியுள்ளார்.

"மலஜல சங்கல்ப காலத்தில் தவிர மற்றக் காலங்களில் கடவுளிடத்தில் அன்பும் ஜீவர்களிடத்தில் பத்தியும் செலுத்த வேண்டும். பக்தி என்பது மன நெகிழ்ச்சி மனவுருக்கம். எல்லா உயர்களிடத்தும் கடவுள் வியாபித்திருத்தலை அறிதலே ஈசுர பக்தியாகும்....."

'பக்தி' என்ற சொல்லுக்கு வள்ளல் பெருமான் தரும் தீர்க்கமான விளக்கத்தைக் காண்க. சதா இறைவனின் துதிபாடியவாறு சோம்பிக் கிடக்கும் பேர்க்கினை வள்ளல் பெருமான் 'பக்தி' என்று ஒப்புக் கொள்ளவில்லை. வெறும் பூஜை, புனஸ்காரங்களை 'பக்தி' என்பதாக ஏற்றுக் கொள்ளவில்லை. சதா தெய்வ நாமத்தை உச்சரித்துத் திரிவதையும் பக்தியுடையோர் செயல் என வள்ளலார் கருதவில்லை.

பின், பக்தி என்றால் என்ன?

'மன நெகிழ்ச்சி, மன உருக்கம்!' இவை பக்தியின் தன்மைகள் என்கிறார். எல்லா ஜீவர்களிடமும் பக்தி செய்வதுதான் பக்தியின் ஒழுக்கம் என நினைவூட்டுகிறார்.

இவ்வாறு 'பக்தி' செய்வது தெய்வத்தின்மீது 'பக்தி' செலுத்துவதாக எங்ஙனம் ஆகும்?

இந்த வினவுக்கு அழகாகப் பதிலளிக்கிறார் வள்ளல் பெருமான்.

''எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருக்கிறார்....''

ஆகவே ஜீவர்களிடம் செலுத்தும் 'பக்தி'யே தெய்வத்திடம் செலுத்தும் பக்தியாகும்.

தன்னைச்சுற்றி வாழும் சக மனிதர்களிடம் மட்டுமல்ல மற்றெல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துவது ஒன்றுதான் உண்மையான ஈசுர பக்தி என்ற வள்ளலாரின் சிந்தனையிலே நம்முடைய பண்டைய மதாசாரியர்கள்-ஞானிகள் தெளிவுறச் சொல்லாத புதுமைக்கருத்து பளிச்சென மின்னிக்காட்டுகிறது! இந்த வகையில் வள்ளல் பெருமான் ஓர் ஆன்மீகப் புரட்சி வாதியாகத் திகழுகிறார் அல்லவா!

இறைவனை நோக்கி யாராவது பிரார்த்தனை செய்துதான் தீருவேன் என்று சொன்னால் வள்ளல் பெருமான் அவர்கள் நோக்கத்திற்குத் தடைவிதிக்க விரும்பவில்லை: 'தாராளமாகப் பிரார்த்தனை செய்யுங்கள்' என அனுமதியும் தருகிறார். ஆனால் பிரார்த்தனை எவ்விதம் அமைய வேண்டும் என்பதற்கு ஒரு வழியையும் உபதேசிக்கிறார்!

''....ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால் அதில் ஒருவனுக்கு வேண்டியவையெல்லாம் அடங்கி விடுகின்றன.''

வெறும் பிராத்தனையிலேயே உலக ஒருமைப்பாட்டுணர்ச்சி தோன்ற எவ்வளவு சிறப்பாக வழி காட்டுகிறார் பாருங்கள்!

இவ்வாறு இறைவனை பக்தி பூர்வமாக வழிபடுவது, பிற ஜீவராசிகள்மீது அன்பு செலுத்துவதால் மட்டுமே சாத்தியமாகும் என்று வழிகாட்டியதன் மூலம் வள்ளல் பெருமான் பயமற்ற பெருவாழ்வு வாழ மக்களுக்கு அரியதோர் யோசனையைக் கூறியருளியிருக்கிறார்.

எந்த அளவுக்கு நம் மனத்தை பிற உயிர்களின் பால் கருணையும், அன்பும், பக்தியும் செலுத்தப் பண்படுத்துகிறோமோ, அந்த அளவுக்கு நம்மால் பயமற்ற சஞ்சலமற்ற, அமைதியான இன்ப வாழ்வு வாழ முடியும்.

## வள்ளலார் காட்டிய வழி!

மக்கள் துன்மார்க்கத்திலிருந்து மீண்டு சன்மார்க்க வாழ்வு வாழவேண்டும் என்று கனவு கண்டார் வள்ளல் பெருமான். 'சன்மார்க்கம்' என்று சொன்னால் ஏற்கனவே பேசப்பட்டு தற்காலம் தூசு படிந்து கிடக்கும் அம்மார்க்கமல்ல; அத்தூசு நிரப்பிய புது மார்க்கம் என்பதனை வலியுறுத்திச் சொல்ல எண்ணிய வள்ளல் பெருமான் 'சுத்த சன்மார்க்கம்' என்று தம்முடைய பரிசுத்தமான வழிக்கு அழுத்தமும் தந்துள்ளார்.

'சுத்த சன்மார்க்கம்' என்று சொன்னால் அதன் உயிரோட்ட மன நோக்கம் எதுவாக இருக்க வேண்டும்?

இந்த வினவுக்கு விளக்கம் தரும் வகையில் தம்முடைய சன்மார்க்க நெறிக்கு 'சமரச சுத்த சன்மார்க்கம்' எனப் பெயர் சூட்டியிருக்கிறார்.

அனைத்துலக உயிர்களிடத்தே சகோதர உணர்வை ஊட்டுவதே தம்முடைய நோக்கம் என்பதை உள்ளடக்கியே 'சமரசம்' என்ற சொல்லை அமைத்திருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது! வள்ளல் பெருமானின் அருள் மொழிகளைக் கவனமாக செவிமடுக்கும்போது இந்த உண்மை நமக்குத் தெளிவாகப்படுகின்றது.

''அகிலமாம் சகோதரத்துவத்தின் மூலக் கருத்தின் சாரத்தை ஒத்துக்கொண்டு இந்தியாவில் 'சகோதர அறம்' நிலைநாட்டப் பெறல் வேண்டும்'' என்ற வள்ளலார் அவர்களின் சித்திவளாக உபதேசம் அவருடைய சமரச நோக்கத்தின் உட்கிடக்கையை ஐயமற உணர்த்துகிறது.

மக்களின் சீரான நல்வாழ்வைக் கவனிப்பதற்கென உலகமெங்கும் அரசுகள் நிலை பெற்றிருக்கின்றன. அத்தகு ஆட்சிகள் துன்மார்க்கர் கைவசப்பட்டு சன்மார்க்க நெறிகட்கு மாறுபட்டு இயங்கினால் தாம் கண்ட ஆன்ம நேய ஒருமைப்பாட்டு இலட்சியம் சரிவர செயற்பட இயலாது என்பதை உணர்ந்த பெருமான், எந்த ஒரு தேசமாயின் அங்கு எத்தகைய ஆட்சி நிலவ வேண்டும் என்பதற்கோர் இலக்கணம் அமைத்துக் காண்பிக்கிறார்.

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக—நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து

என்பது வள்ளலார் வாக்கு. மற்றும்,

"....அச்சந்தவிர்த்தே, அருளிற் செலுத்துகின்ற விச்சை அரசே விளங்கிடுக...." என்றும் அருளியிருக்கிறார்.

சமரச சன்மார்க்க நெறியின் சமுதாயக் கொள்கை, உலக ஒருமைப்பாட்டுச் சமுதாய இலட்சியமாக,

> "ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
> ஒருமையுள ராகிஉல கியல் நடத்த வேண்டும்"

என்று அறிவுறுத்தியிருக்கிறார்: அதாவது இன்று நாம் காணும் சோஷலிச சமுதாய இலட்சியத்திற்கு அன்றே அடிக்கல் நாட்டியிருக்கிறார் வள்ளல் பெருமான்.

இவ்வாறு ஆன்மீக நெறி நின்று, அனைத்துலக ஒருமைப்பாட்டுக் குரல் கொடுத்த அருட்பிரகாச வள்ளலார் அவர்கள் பாரத சமுதாயம் நினைத்துப் பின்பற்றி, வழிநடக்க வேண்டிய கண்கண்ட தெய்வமாகும்.

உலக ஒருமைப்பாட்டைப்பற்றி உலகமெங்கும் இந்த நேரத்தில் ஒருலக இலட்சியத்துக்கு வழி காட்டியாக அமைந்த வள்ளல் பெருமானை நாம் சரிவரப் புரிந்துகொண்டு அவர் வழிநடக்க நோன் பேற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுநல வாழ்வில் ஈடுபட்டு பிறர்க்குறியாளராக வாழ்ந்து அதுவே 'தெய்வ பக்தி' என்பதனை உணர்ந்து பயமிலாப் பெருவாழ்வு வாழ முயல்வோமாக.